# 2014 වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# Annual Report



**සේවක අර්ථසාධක අරමුදල**

ஊழியர் சேம நிதியம்

**Employees' Provident Fund**

# ஊழியர் சேமலாப நிதியம் ஆண்டறிக்கை - 2014

இலங்கையின் மிகப் பாரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேமலாப நிதியமானது முதலீடுகளின் மீது வரவேற்கத்தக்க வருமான வீதம் அதேபோன்று நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் ஆகிய இரண்டினையும் சமமான அளவில் பேணியதன் மூலம் அதன் உறுப்பினர்களின் நலவுரித்துக்களைத் தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றது.

ஊ. சே. நிதியம் நிதியியல் ஆண்டினை வெற்றிகரமாக வழிநடத்திச் சென்று ரூ.1,487 பில்லியன் பெறுமதியான மொத்தச் சொத்துக்களை எய்தியதுடன் 2014ம் ஆண்டிற்கான முதலீட்டு வருமானமாக முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த தொகையான ரூ.163 பில்லியனைப் பெற்றுக் கொண்டது. பெறுமதியில் ஏற்பட்ட வளர்ச்சியானது ஊ.சே.நிதியத்தின் சராசரி சொத்துப்பட்டியல் மீதான 12.11 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்கதொரு வருவாய் வீதத்தின் மூலம் ஈட்டிக் கொள்ளப்பட்ட அதேவேளை அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது நிலுவைகளின் மீது 10.50 சதவீத வட்டி வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வீழ்ச்சியடைந்துவரும் வட்டி வீதச் சூழலொன்றிற்கும், சவால்மிக்க பங்குச் சந்தை நிலைமைகளுக்கிடையிலும் ஊ.சே. நிதியம் அடைந்து கொண்ட இக்குறிப்பிடத்தக்கச் சாதனையானது உறுதி மிக்க நிதிய முகாமைத்துவம், முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. முதலீடுகளில் பெறுபேறுகளின் எச்சரிக்கைத் தன்மையை சிறப்பாக முகாமைத்துவம் செய்து ஊ.சே.நிதியத்தினால் இந்த ஆண்டிலும் பிரதானமாக அரசாங்கப் பிணைப்பத்திரங்களிலான முதலீடு பேணப்பட்டது.

# பொருளடக்கம்

## பகுதி 1


தொலைநோக்கு மற்றும் பணி 79
நாணயச் சபையின் தலைவர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடமிருந்தான செய்தி 80
தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி 82
வினைத்திறனின் முக்கிய விபரங்கள் 84
முக்கிய தொழிற்பாட்டு விபரங்கள் 86
ஒழுங்குமுறைக் கட்டமைப்பு 86
பொருளாதார மீளாய்வு 90
ஊ.சே. நிதியச் செயற்றிறன் மீளாய்வு 93


## பகுதி 2

### நிதியியல் கூற்றுக்கள்


வருமானம் மற்றும் செலவினக் கூற்று 101
அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று 102
நிதியியல் நிலைமைக் கூற்று 103
பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்கு 104
முதலீடுகளின் கூற்று 105
உறுப்பினர் பங்குரிமை மூலதனம்/ நிதிநிலை மாற்றக் கூற்று 106
காசுப்பாய்வு கூற்று 107
கணக்கீட்டுக் கொள்கைகள் 108


### வருமானம் மற்றும் செலவினக் கூற்றுக்குரிய குறிப்புகள்


1-5. முதலீட்டு வருமானம் 112
6. ஏனைய வருமானம் 113
7. மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் 113
8. வருமான வரிச் செலவினங்கள் 113


### அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்றிற்குரிய குறிப்புக்கள்


9. விற்பனைக்கு உள்ள நிதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியின் தேறிய மாற்றம் 113


### நிதி நிலைமைக் கூற்றுக்குரிய குறிப்புக்கள்


10. சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகளும் 114
11. செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் 115
12. அருவச் சொத்துக்கள் 115
13. நிதிச் சொத்துக்கள் 116
14. ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்/ பெறவேண்டிய நிலுவைகள் 117
15. காசு மற்றும் பணத்துக்குச் சமமான சொத்துகள் 117
16. கடன் வழங்குனர் 117
17. ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் 118
18. உறுப்பினர் நிலுவைகள் 118
19. ஒதுக்கங்கள் 118

## பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்குகளுக்கான குறிப்பு


20. பெறுகைகள் 120
21. கொடுப்பனவுகள் 121


## முதலீட்டுக் கூற்றுக்கான குறிப்பு


22. இலாபம் அல்லது நட்டத்தின் மூலமான சந்தைப் பெறுமதி 122
23. விற்பனைக்கான சொத்துக்கள் 124
24. முதிர்ச்சி வரை வைத்துள்ள முதலீடுகள் 128
25. கடன்கள் மற்றும் பெறவேண்டிய பணம் 132
26. முதலீடுகளின் அசைவு 133
27. சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடுகளின் வகைப்படுத்தல் 134



## கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 137


# பகுதி 3

## அட்டவணைகள்


1. முதலீடுகள், முதிர்ச்சிகள் மற்றும் முதலீட்டின் மீதான வருமானம் (1982 - 2014) 226
2. உறுப்பினர் நிலுவைகள் மீதான வருமான வீதங்கள் (1982 - 2014) 227
3. உறுப்பினர் நிலுவைகள், உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி மற்றும் உறுப்பினர் நிலுவைகள் மீதான பயனுறு வீதங்கள் (1982 - 2014) 228
4. முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் கூற்று (1982 - 2014) 229
5. சுருக்கப்பட்ட காசுப்பாய்வு (நாணயச் சபை) (1982 - 2014) 231
6. சுருக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கூற்று (1992 - 2014) 234


jan.
feb.
mar



## எமது தொலைநோக்கு

எமது உறுப்பினர்களை ஒரு நிறைவான ஓய்வுக்கால வாழ்க்கையை வாழச் செய்யக்கூடியவாறு இப்பிராந்தியத்தில் மிகவும் நம்பிக்கையான ஓய்வு நிதியமாகத் திகழச் செய்தல்

## எமது பணி

ஆழ்ந்த அறிவும் நவீனத்துவமும் கொண்ட முகாமைத்துவத்தினூடாக எமது உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வுகால நன்மைகளையும் வினைத்திறன்மிக்க பணிகளையும் வழங்குதல்

# நாணயச் சபையின் தலைவர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடமிருந்தான செய்தி



2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஊ.சே. நிதியத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 15.2 மில்லியனிலிருந்து 15.8 மில்லியனாக அதிகரித்ததோடு அதன் மொத்தச் சொத்துக்கள் ரூ.1,300 பில்லியனிலிருந்து ரூ.1,486.9 பில்லியன் வரையில் 14.4 சதவீதத்தால் அதிகரித்தன.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் சார்பில் ஊழியர் சேமலாப நிதியத்தின் 2014ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை நான் பெருமகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன்.

2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஊ.சே. நிதியத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 15.2 மில்லியனிலிருந்து 15.8 மில்லியனாக அதிகரித்ததோடு அதன் மொத்தச் சொத்துக்கள் ரூ.1,300 பில்லியனிலிருந்து ரூ.1,486.9 பில்லியன் வரையில் 14.4 சதவீதத்தால் அதிகரித்தன. ஆழ்ந்த அறிவுடைய கோட்பாடுகள் மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள் என்பனவற்றின் காரணமாக நிதியமானது இவ்வாண்டுப் பகுதியில் 12.11 சதவீதம் கொண்ட முதலீட்டின் மீதான வருமானத்தினை உருவாக்கக்கூடியதாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதன் விளைவாக, குறைந்த வட்டிவீத நிலைமைக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக 9வது ஆண்டுக்கும் நூற்றுக்குப் 10க்கும் அதிகமான போட்டித் தன்மைவாய்ந்த வட்டியினை அங்கத்தவர் நிலுவைகளுக்கு வழங்க ஊழியர் சேமலாப நிதியால் இயன்றதுடன் இவ்வாண்டு அவ்வீதமானது 10.50 ஆகும்.

கடந்த ஆண்டுகளில் ஊ.சே. நிதியத்தின் வெற்றிகளுக்கு உறுப்பினர்களின் எதிர்கால நலன்களைக் கருத்திற் கொண்ட முதலீடுகளை மேற்கொள்வதில் காட்டப்பட்ட தளராத முயற்சிகளே காரணமாக அமைந்தன. இந்நடவடிக்கையானது அவர்களது சொத்துக்களைப் பாதுகாத்து முன்மதியுடைய முதலீடுகளை மேற்கொள்ளச் செய்வது மட்டுமல்லாமல் செயற்றிறனை வளர்ப்பதன் மூலம் செலவைக் குறைக்கும் நன்மையை அங்கத்தவர்களுக்கு வழங்கும் நோக்கில் இடம்பெறுகிறது. இது தற்போதைய செயற்பாடுகளை எப்போதும் மீளாய்ந்தும் தொகுத்தும் முன்னெடுத்துச் செல்லும் ஒரு செயற்பாடாகும். அதற்கேற்ப, எமது தரப்பினருக்கும் மிகவும் வினைத்திறன்மிக்க சேவையை வழங்கும் நோக்கில் ஊழியர் சேமலாப நிதிய திணைக்களத்தினால் இவ்வாண்டில் வெற்றிகரமான கருத்திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன.

இலத்திரனியல் ஊடகத்தின் மூலமாக நிதியினை அனுப்புவதற்கு தொழில்தருநர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருவதன் மூலம் சச்சரவுகள் ஏதுமற்ற விதத்தில் ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களின் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஊ.சே. நிதியம் தொடர்ந்தும் வழிவகைகளைக் கண்டு வருகின்றது. 50க்கு அதிகமான தொழில்பெறுனர்களைக் கொண்ட அனைத்து தொழில்தருனர்களுக்குமென கட்டாயமாக்கப்பட்ட இலத்திரனியல் தரவுகளைச் சேகரிக்கும் முறையின் கீழ் ஆங்காங்கே இருந்த உறுப்பினர்களின் விபரங்களை அங்கீகரிக்கும் செயற்பாட்டை மிகவும் சரியாக மேற்கொள்ள ஊழியர் சேமலாப நிதியத்தால் இயன்றது. இது தனிப்பட்ட உறுப்பினர்களின் இற்றைப்படுத்தும் செயற்பாட்டினை விரைவுபடுத்துவதுடன் இற்றைப்படுத்தும் கணக்குகளின் விபரங்களை உறுப்பினர்களுக்கு சமர்ப்பிக்கும் செயற்பாட்டையும் வினைத்திறன் மிக்கதாக்கலாம். ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவுப் பொறிமுறையயை இலகுவாக்குவதற்கு வர்த்தக வங்கிகள் எம்மோட் இணைந்து மேற்கொண்ட முயற்சியைப் பாராட்டுவதற்கும் நான் இத்தருணத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

நிதியத்தின் உறுப்பினர்களுக்கு மேலும் நவீன சேவைகளை வழங்கும் நோக்கில் தாபிக்கப்பட்ட அங்கத்தவர் பங்களிப்புப் பண விபர அறிக்கைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான

கருத்திட்டம் நூற்றுக்கு 90 வீதத்தால் பூர்த்திசெய்ய முடிந்தது. அப்பிரதி ஆவணங்கள் உரிய விதிமுறைகளுக்கு ஏற்ப உள்ளனவா என்பதை சான்றுப்படுத்துவதற்குத் தேவையான கணக்காய்வுகள் இப்போது செயற்படுவதோடு, ஊழியர் சேமலாப நிதியத்தில் பாரிய நெறியாள்கைச் செயற்பாட்டை சுமுகமாக்கும் ஆற்றல் இதன்மூலம் கிட்டியது.

இச்செயற்றிட்டங்கள் நிறைவுபெற்றதும் ஊ.சே. நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு உயர்மட்டத்திலான சேவையினை வழங்கக்கூடியதாயிருக்கும். உறுப்பினர் பங்களிப்புக்களை இலத்திரனியல் ரீதியாக சமர்ப்பிப்பதன் மீது தங்கியிருப்பதனை அதிகரிப்பதும் உறுப்பினர் கணக்குகளை விரைந்து இற்றைப்படுத்துவதும் உறுப்பினர்கள் தமது பணவனுப்பல்களை பரீட்சித்துக் கொள்வதற்கும் தமது வாழ்நாள் முழுவதற்குமான வருவாய்கள் பற்றி கவனித்துக் கொள்வதற்கும் இம்முறை பாரிய அநுகூலமாக அமையுமென்பதால் நாம் இம்முறையினை வலுப்படுத்த எதிர்பார்க்கிறோம். இருப்பினும் கூட, இவ்வசதிகளை சிறந்த முறையில் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதை பயன்பாட்டாளர்கள் அறிந்திருந்தாலொழிய இப்பொறிமுறை நடைமுறைக்கிடப்படுவதனால் போதுமான நன்மைகள் கிடைக்காது. இதற்கமைய, ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் ஊ.சே. நிதியம் பொதுமக்களுக்கான விழிப்புணர்வுப் பிரச்சாரங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அவற்றுள் வீடமைப்புக் கடன் முகாமைத்துவம் தொடர்பில் வங்கி அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம், தேசிய மட்டத்திலான கம்பனி நிகழ்வுகளில் பங்கேற்றல் மற்றும் குறிப்பாக பெருந்தோட்ட சமூகத்தினரை இலக்காகக் கொண்ட நடமாடும் பணிகள் என்பன முக்கியமானவைகளாகும்.

இவை தவிர ஊ.சே. நிதிய உறுப்பினர்கள் 2015 இலிருந்து 30 சதவீதம் வரையிலான நன்மைகளை ஓய்வுபெறுவதற்கு முன்னர் கோரக்கூடியவர்களாக இருக்கின்றனர். மிகத் தேவையாக இருக்கும் வீடமைப்பு மற்றும் மருத்துவத் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கின்ற விதத்தில், 10 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலப்பகுதிக்குப் பங்களிப்புக்களை வழங்கிய, ரூ.300,000 இற்கும் மேம்பட்ட நிலுவையைக் கொண்டிருக்கும் செயற்பாட்டு உறுப்பினர்கள் தற்பொழுது ரூ.2,000,000 வரை கோருவதற்கு தகுதியுடையவராவர். நிகழ்காலத்தில் காணப்படுகின்ற மேலதிக செயற்பாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்து வினைத்திறன்மிக்கதும் இலகுவான சேவையையும் வழங்கும் நோக்கில் ஊழியர் சேமலாப நிதியம் வழிவகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் ஊழியர்களின் பங்களிப்பும் கடப்பாடுகளுமின்றி மேற்குறிப்பிட்ட சாதனைகளெல்லாம் சாத்தியமாகியிருக்காது என்பதனால் நாணயச் சபை தொழில் திணைக்கள அலுவலர்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்கள அலுவலர்களுக்கும் இவ்வாண்டுப் பகுதியில் இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் ஆற்றிய அயராத அர்ப்பணிப்புகளுக்காக பாராட்டினைத் தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றது.

மேலும், நாணயச் சபை, ஊ.சே. நிதியத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்களது வாழ்நாள் முழுவதற்குமான வருவாய்களை முகாமைப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கி மீது அவர்கள் வைத்திருக்கும் தொடர்ச்சியான நம்பிக்கைக்காக அதன் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அதன் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பானதும் நிறைவானதுமான ஓய்வுகாலத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் தொடர்ந்தும் பணியாற்றுவோமாக.

**கலாநிதி. இந்திரஜித் குமாரசுவாமி**
**ஆளுநர், இலங்கை மத்திய வங்கி**
**நாணயச் சபையின் தலைவர்**

# தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி



நிதியத்தின் உறுப்பினர்கள் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான பிரவேசத்தை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், 2014ம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மீட்புத் தகவல் கட்டமைப்பு நாடுபூராகவுமுள்ள உப தொழிற் காரியாலயங்களில் வெற்றிகரமாகப் பரவலாக்கப்பட்டுள்ளது.

ஊ.சே. நிதியமானது, ஓய்வூதிய நன்மைகளை அனுபவியாத இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசசார் துறைகளிலுள்ள ஊழியர்களுக்கு நிறைந்த ஓய்வுகால வாழ்க்கையினை வழங்கும் முக்கிய குறிக்கோளுடன் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதன் சொத்து, மற்றும் உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்ப எடுத்துக் கொண்டால் அது தற்போது இலங்கையில் காணப்படும் பாரிய சமூகப் பாதுகாப்பு முறையாக மாறியுள்ளது.

2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஊழியர் சேம நிதியத்தினால் அடையப்பட்ட முன்னேற்றங்களைத் தாங்கி வரும் 2014ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கையினை வெளியிடுகின்ற இச்சந்தர்ப்பத்தில் ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்கு இவ்வாண்டில் திறன்மிக்க பணிகளை அதிகரிக்க உதவிய இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்கள அலுவலர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேற்குறிப்பிட்ட முன்னேற்றங்களை அடைவதற்கு தொழில் திணைக்களத்திலிருந்தும் பல செயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. செலுத்தத் தவறிய உறுப்பினர் பங்களிப்புக்களைச் சரியான முறையில் சேகரிக்கும் நோக்குடன் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் நாடெங்கிலுமுள்ள பெரும்பாலான மாவட்ட தொழில் அலுவலகங்களில் ஊ.சே. நிதியப் பங்களிப்பு அறவிடல் கண்காணிப்பு முறைமை வெற்றிகரமாக நடைமுறைக்கிடப்பட்டது. ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்கான பணியினை விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக, ஊழியர் சேம நிதியத்தின் தகவல் முறைமை வலய தொழில் அலுவலகங்களினூடாக நாடு முழுவதும் வெற்றிகரமான முறையில் பன்முகப்படுத்தப்பட்டது.

தொழில் திணைக்கள அலுவலர்களுக்கு, சட்ட ரீதியான பொறுப்பாண்மைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் ஆற்றிய பங்களிப்பிற்காகவும் ஊழியர்கள் மற்றும் தொழில்தருநர்கள் ஆகிய இரு தரப்பினருடனும் ஆரோக்கியமான உறவுமுறைகளைப் பேணியமைக்காகவும் நான் எனது நன்றிகளை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஊ.சே. நிதியத்தின் நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கொண்டு நடத்த உதவிய இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்கள அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாண்டறிக்கையானது ஊழியர்களுக்கும் தொழில்தருநர் களுக்கும் நிருவாகம் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள அலுவலர்களுக்கும் மாணவர்கள் உட்பட இத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள எந்தவொரு தரப்பினருக்கும் பெறுமதிமிக்க தகவல்களை வழங்குமென நான் நம்புகிறேன்.

**ஹேரத் யாப்பா**
**தொழில் ஆணையாளர் நாயகம்**


LLOYD'S
BUILDINGS

# வினைத்திறனின் முக்கிய விபரங்கள் 2014

### அட்டவணை 1: முக்கிய நிதி விபரங்கள்

(ரூ.மில்.)

| விபரங்கள் | 2013 | 2014 |
|---|---|---|
| பங்களிப்புக்கள் | 80,176 | 90,049 |
| மீளளிப்புக் கொடுப்பனவுகள் | 50,243 | 65,118 |
| தேறிய பங்களிப்புக்கள் | 29,933 | 24,931 |
| மொத்த வருமானம் | 136,657 | 163,873 |
| தேறிய வருமானம் | 125,610 | 150,662 |
| ஒதுக்கிலிருந்து/ ஒதுக்கிற்கு மாற்றல்கள் | 3,700 | (4,000) |
| உறுப்பினர் நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி | 126,992 | 137,291 |
| உறுப்பினர் நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம் (ஆண்டிற்கு %) | 11.00 | 10.50 |
| சராசரி சொத்துப்பட்டியல் மீதான வருவாய் வீதம் (ஆண்டிற்கு %) | 11.54 | 12.11 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | 979 | 1,043 |
| மொத்த வருமானத்தின் சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவுகள் (%) | 0.72 | 0.64 |

### வரைபடம் 1: நிதியத்தின் வளர்ச்சி




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| மொத்தத் தேறிய சொத்துக்கள் (ரூ.பில்.) | 900 | 1,018 | 1,144 | 1,300 | 1,487 |
| வளர்ச்சி வீதம் (%) | 16.9 | 13.1 | 12.4 | 13.6 | 14.4 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 2: உறுப்பினர்களின் இறுதி நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| மொத்தத் தேறிய சொத்துக்கள் (ரூ.பில்.) | 96.3 | 101.3 | 115.8 | 127.0 | 137.3 |
| வட்டி வீதம் (%) | 12.5 | 11.5 | 11.5 | 11.0 | 10.5 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 3: பங்களிப்புக்கள், மீளளிப்புக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 54.8 | 61.9 | 70.2 | 80.2 | 90.0 |
| மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 34.9 | 47.3 | 48.7 | 50.2 | 65.1 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 19.9 | 14.6 | 21.5 | 29.9 | 24.9 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 4: மீளளிப்புக் கொடுப்பனவுகளுக்கான திரவத்தன்மை உள்ளடக்கம்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| மொத்தக் காசு உட்பாய்ச்சல் (பங்களிப்பு வருமானம்) ரூ.பில் | 447.8 | 531.7 | 558.8 | 848.5 | 716.0 |
| காசு வெளிப்பாய்ச்சல் (மீளளிப்பு) ரூ.பில | 44.3 | 64.4 | 70.9 | 85.6 | 95.3 |
| திரவத்தன்மை உள்ளடக்கம் (மொத்தக் காசு உட்பாய்ச்சல்/ மீளளிப்பு) | 10.1 | 8.3 | 7.9 | 9.9 | 7.5 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 5: உறுப்பினர்களுக்கான பயனுறு அனுகூல வீதமும் சந்தை வட்டி வீதமும்




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 6: சராசரி முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வருவாய்




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டு வருமானம் (ரூ.பில்) | 120.9 | 115.8 | 121.4 | 136.3 | 163.2 |
| முதலீட்டின் மீதான வருமானம் (%) | 15.1 | 12.5 | 11.6 | 11.5 | 12.1 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 7: முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு




| வகை | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| அரச பிணையங்கள் (%) | 92.2 | 91.1 | 93.6 | 92.5 | 91.2 |
| பங்குரிமை மூலதனம் (%) | 7.0 | 7.7 | 5.4 | 5.8 | 6.7 |
| தொகுதிக் கடன்களும் ஏனையவையும் (%) | 0.8 | 1.2 | 1.0 | 1.7 | 2.1 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 8: உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை




| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்பு (மில்) | 2.2 | 2.2 | 2.3 | 2.4 | 2.4 |
| பங்களிப்பல்லாதவை (மில்) | 11.2 | 11.8 | 12.3 | 12.8 | 13.4 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

# முக்கிய தொழிற்பாட்டு விபரங்கள்

01. உறுப்பினர்களுக்கு 10.5 சதவீதமான வட்டி செலுத்தப்பட்டது.
02. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 15.8 மில்லியனுக்கு அதிகரித்தது.
03. பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2.4 மில்லியன்.
04. நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.1,487 பில்லியனுக்கு அதிகரித்தது.
05. 127,951 உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளாக ரூ.65,118 மில்லியன் செலுத்தப்பட்டது.
06. பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்காக 17,786 உறுப்பினர்களுக்கு அவர்களது ஊ.சே. நிதியக் கணக்கு நிலுவைகளுக்கெதிராக உத்தரவாதச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
07. முக்கியமாகப் பெருந்தோட்டத் துறையின் பயன்பெறுநர்களை கவனத்திற் கொண்டு பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் நடமாடும் பணிகளும் நடத்தப்பட்டன.
08. தற்போதைய ஈ-கூற்று முறைமையின் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு உறுப்பினர் விபரங்களை கணனி வழியில் அதேநேரத்தில் சரிபார்த்துக் கொள்ளும் புதிய முறையொன்று 2014இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
09. 139,266 ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய உறுப்பினர்கள் மீள்பதிவு செய்யப்பட்டதுடன் 129,891 பேர் புதிய உறுப்பினர் பதிவேட்டில் (NMR) சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

# ஒழுங்குமுறைக் கட்டமைப்பு

ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி/நிதியம்) இலங்கையிலுள்ள மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமாக விளங்குகிறது. இது தனியார் மற்றும் அரசுசார் துறைகளிலுள்ள ஊழியர்களுக்கு ஓய்வுகால நன்மைகளை வழங்குவதற்காக 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, தொழில் ஆணையாளர் நிதியத்தின் நிருவாக ஆணையாளராகச் செயற்படுகின்ற வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளராகச் செயற்படுவதற்கான அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் மூலம் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் வசதியளிக்கின்றது.

ஊ.சே. நிதியமானது ஒரு கட்டாயப் பங்களிப்பு ஓய்வூதிய நன்மைகள் திட்டமாகும். நிதியத்திற்கான குறைந்தபட்ச கட்டாயப் பங்களிப்பு வீதம் ஊழியர் சேம நிதிய உறுப்பினரின் மொத்த மாதாந்த வருவாயில் 20 சதவீதமாகும். தொழில்தருநர்களும் ஊழியர்களும் (உறுப்பினர்கள்) ஊழியர் சேம நிதியத்திற்கு உறுப்பினர்களின் மொத்த வருவாயில் குறைந்தபட்சம் முறையே 12 சதவீதத்தினையும் 8 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

பங்களிப்புக்களையும் ஊழியர் விபரங்களையும் நிதியத்திற்கு உரிய காலப் பகுதிக்குள் அனுப்புவது தொழில்தருநரின் கடப்பாடாகும். 150 ஊழியர்களுக்கும் குறைவானவர்களுக்கு தொழில் வழங்கும் தொழில்தருநர்கள் (சி வகை) பங்களிப்பு களையும் தொடர்பான விபரங்களையும் (படிவம் சி) மாதாந்த அடிப்படையில் அனுப்பி வைக்க வேண்டியதுடன் 150 க்கு கூடுதலானவர்களுக்கு தொழில் வழங்கும் தொழில்தருநர்கள் பங்களிப்புக்களை மாதாந்தமும் உறுப்பினர் விபரங்களை (படிவம் சி3) ஆண்டிற்கு இரு தடவையும் அனுப்பி வைத்தல் வேண்டும். எனினும், 2012இல் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின்படி, குறைந்தபட்சம் 50 ஊழியர்களைக் கொண்டுள்ள தொழில்தருநர்கள் பங்களிப்புக்களையும் உறுப்பினர் விபரங்களையும் இலத்திரனியல் ஊடகத்தினூடாக மாதாந்த அடிப்படையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிதியத்தின் உறுப்பினர்கள் அவர்கள் ஓய்வு பெறும் வயதினை அடைந்ததும் (பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினையும்) அவர்களது ஓய்வூதிய நன்மைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவர். ஓய்வு பெறும் போது மீளப் பெற்றுக் கொள்வது தவிர, புலம்பெயர்தல், நிரந்தரமாக ஊனமடைதல், திருமணம் காரணமாக தொழிலிலிருந்து விலகுதல் (பெண் உறுப்பினர்களுக்கு மாத்திரம்) ஓய்வூதியம் பெறத்தக்க தொழில்களில் இணைந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு காரணங்களின் பொருட்டும் உறுப்பினர்கள் தமது நிலுவைகளை மீளப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர். இறந்த உறுப்பினரின் சட்ட ரீதியான வாரிசுகள் உறுப்பினர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள உரித்துடையவராவர். ஓய்வூதிய நன்மைகளுக்குப் புறம்பாக, ஊ.சே.நிதியம் உறுப்பினர்கள் வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள நிலுவை களை பிணையாக வைத்து அனுமதிக்கப்பட்ட ஐந்து ஒப்புதலளிக்கப்பட்ட கடன் வழங்கல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கின்றது.

## தொழில் ஆணையாளரின் தொழிற்பாடுகள்

- தொழில்தருநர்களையும் நிதியத்தின் உறுப்பினர்களையும் நிதியத்தில் பதிவு செய்தல்.
- ஊ.சே.நிதியச் சட்டத்திற்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதுடன் உறுப்பினர் பங்களிப்புக்களை செலுத்தாதவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- தாமதமான பங்களிப்புக்களின் மீது தொழில்தருநர்களிடமிருந்து மேலதிகக் கட்டணங்களை அறவிடல்.
- நன்மைகளின் மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளலும் அத்தகைய விண்ணப்பங்கள் தொடர்பாக நன்மைகளின் கொடுப்பனவு பற்றி மத்திய வங்கிக்கு ஆலோசனை வழங்கும் தீர்மானக் கடிதங்களை வழங்குவதும்
- உறுப்பினரொருவரின் முன்னைய கணக்குகளை ஒன்றுசேர்ப்பதற்கான விண்ணப்பங்களுக்கு அங்கீகாரமளித்தல்.
- உறுப்பினர்கள், அவர்களது உறுப்பினர் நிலுவைகளை பிணையாக வைத்து ஒப்புதல் பெற்ற கடன் வழங்கல் நிறுவனங்களிலிருந்து வீடமைப்புக் கடன்களை பெற்றுக் கொள்ளக்கூடியவாறு ஏற்புடைய வீடமைப்புக் கடன்களுக்கு ஒப்புதலளித்தல்.

## இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது தொழிற்பாடுகள்

- உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிக் கட்டணங்களையும் வருமானத்தையும் பெற்றுக் கொள்ளுதல்.
- உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல்.
- உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச வருவாய்களை வழங்கும் விதத்தில் மிகையான நிதியங்களை முதலீடு செய்யும் அதேவேளையில் நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரின் சம்மதத்துடன் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வீதத்தில் உறுப்பினர் கணக்குகளுக்கு வருடாந்த வட்டியை வரவு வைத்தல்.
- ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கணக்குகளின் ஆண்டுக் கூற்றுக்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்.
- தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதத்திற்கிணங்க மீளளிப்பு நன்மைகளை மேற்கொள்ளுதல்.
- உறுப்பினர்கள் வீடமைப்புக் கடன்களைப் பெறுவதனை இயலச் செய்யும் விதத்தில் தொடர்பான கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர் நிலுவைகள் தொடர்பான சான்றிதழை வழங்குதல்
- ஒவ்வொரு ஆண்டின் இறுதித் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மாண்புமிகு தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முதலீட்டுக் கூற்றுக்கள் போன்ற தகவல்களை சமர்ப்பித்தல்.

# 2014.12.31இல் உள்ளவாறு சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

## தொழில் திணைக்களம் (ஊ.சே.நிதியப் பிரிவு)

| பெயர் | பதவி | பிரிவு |
|---|---|---|
| திரு. டபிள்யு டி எஸ் சி வெலிவற்ற | தொழில் ஆணையாளர் | |
| திருமதி. எம். உமாமகள் | பிரதித் தொழில் ஆணையாளர் | அனுகூலம் கோரல் |
| திருமதி. கே பி எச் இந்திராணி | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி பி எச் பி ஐ பண்டார | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. டி ஆர் ஏ என் ரத்னாயக்கா | உதவி தொழில் ஆணையாளர் | |
| செல்வி டி ஏ எஸ் விஜயசுந்தர | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. கே என் லியனகே | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. கே எல் கே பெரேரா | துணை தொழில் ஆணையாளர் | அறவிடல் |
| திரு. டி எச் ரி தேஷபிரியா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. கே ஜி ஜே பீ குறுகோஹதன்ன | உதவி தொழில் ஆணையாளர் | |
| செல்வி. ஆர் எம் ஜி சுகந்திக்கா | உதவி தொழில் ஆணையாளர் | |
| செல்வி எச் ஆர் ஜே ஜி குணதிலக | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. பீ வசந்தன் | பிரதித் தொழில் ஆணையாளர் | தகவல் தொழில்நுட்பம் |
| திருமதி. எம் சாவித்திரி குணதிலக | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. எம் எச் டி எல் ஏ விஜேபாலா | உதவி தொழில் ஆணையாளர் | |
| செல்வி டி வி ரி பி தயானந்த | உதவி தொழில் ஆணையாளர் | நிருவாகம் |
| செல்வி ஏ ஜி டி ரி கே ஜெயசிங்க | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி பீ ஏ எம் ஏ பாலசூரியா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி என் எம் வை துஷாறி | உதவி தொழில் ஆணையாளர் | அனுகூலம் கோரல் - எல் |
| திருமதி ஜி ஏ டி ஆர் கயனி | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி வி கே டி தறங்கனி | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. எம் ஈ ஜி சமரவீர | உதவி தொழில் ஆணையாளர் | மத்திய கோப்புப் பிரிவு |
| திருமதி டபிள்யு ஏ என் எம் கருணாரத்ன | உதவி தொழில் ஆணையாளர் | |

## இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களம்

| பெயர் | பதவி | பிரிவு |
|---|---|---|
| திரு. பி டபிள்யு டி என் ஆர் றொட்றிகோ | கண்காணிப்பாளர் | |
| திரு. எம் எஸ் கே தர்மவர்தன | மேலதிக கண்காணிப்பாளர் | |
| திரு. ரி டி எச் கருணாரத்ன | மேலதிக கண்காணிப்பாளர் | |
| திரு. ஏ ஜி யு திலகரத்ன | மேலதிக கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் ஏ எல் முத்துகுமார | பிரதிக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஜே டி எஸ் ஜே நாணயக்கார | பிரதிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எஸ் என் திலகவர்தன | சிரேஷ்ட உதவிக் கண்காணிப்பாளர் | செயலாளர்/ ஊ.சே.நி. அலுவலகம் |
| திருமதி. எம் டபிள்யு கே எஸ் சிறிவர்த்தன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. ஓ கே எஸ் பி பண்டார | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. கே கே சி எஸ் கன்னங்கிரா | உதவிக் கண்காணிப்பாளர் | மேலதிகக் கண்காணிப்பாளரின் செயலாளர் ஊ.சே.நி. அலுவலகம் |

| பெயர் | பதவி | பிரிவு |
|---|---|---|
| திரு. எச் ஜி எல் விக்கிரமசிங்க | உதவிக் கண்காணிப்பாளர் | கம்பனிப் பணிகள் மற்றும் நிருவாகம் |
| திரு. எம் எஸ் வித்தானகே | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி கே ஜி என் விஜயரத்ன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. பீ டபிள்யு விமால் சாந்த | பதில் உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. டபிள்யு ஏ எஸ் பீ ஐ ஏ ஜெயவர்த்தன | பதில் உதவிக் கண்காணிப்பாளர் | உறுப்பினர்கள் மீள்பதிவுப் பிரிவு |
| திருமதி வை சி எம் விஜயதிலக | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் கொஸ்வத்த | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | சேகரிப்புப் பிரிவு |
| செல்வி ஜி பீ என் ஏ சமரநாயக்க | உதவிக் கண்காணிப்பாளர் | நடைமுறைப் பங்களிப்புப் பிரிவு |
| திருமதி கே ஏ சேனரத்ன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. கே ஏ என் எல் ரத்னசேகர | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஏ ஜி எஸ் பாலித | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. பீ எம் டபிள்யு எஸ் பாலசூரியா | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. யு ஏ குணவர்த்ன | உதவிக் கண்காணிப்பாளர் | கூற்றுப்படுத்தப்பட்ட பங்களிப்புப் பிரிவு |
| திருமதி. டி எம் ஜி பியதிலக | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எம் வி டபிள்யு டி சொயிசா | பதில் உதவிக் கண்காணிப்பாளர் | இ - சேகரிப்புப் பிரிவு |
| திருமதி. டி எல் றொகினி | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. என் எம் எம் தமயந்தி | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | நிதிய முகாமைத்துவப் பிரிவு |
| திரு. டபிள்யு ஜி ஆர் ஹர்ஷாபிறியா | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எம் என் பி ஜெயவீர | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. ரி உதயசீலன் | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி டி பி உடுகமகோறள | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் பதுமநாபன் | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. கே எல் ஏ சி என் அனுராதா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி கே எம் ரி ஏ வை பண்டார | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. என் எல் எம் அபேசேகரா | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எச் ஏ ஹெற்றிகேவா | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | முதலீட்டு இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு |
| செல்வி ஜி பீ எம் பி திசநாயக்கா | உதவிக் கண்காணிப்பாளர் | கணக்குகள் மற்றும் தீர்ப்பனவுப் பிரிவு |
| செல்வி ஈ ரி டபிள்யு ரி ஆர் பி உடுகும்பற | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி டி வை எஸ் மகாகெதரவத்த | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஏ ரி உபசேன | பதில் உதவிக் கண்காணிப்பாளர் | பதிவேட்டு முகாமைத்துவப் பிரிவு |
| திரு. எம் விக்கிரமரத்ன | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி சி பி ஜெயவீர | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | பதிவேட்டு திருத்தப் பிரிவு |
| திருமதி எஸ் டி ரத்னவீர | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் விஜயசிங்க | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எச் ஏ எஸ் குலசிங்க | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எல் எஸ் கமகே | உதவிக் கண்காணிப்பாளர் | வீடமைப்புக் கடன் பிரிவு |
| திரு. டபிள்யூ ஏ நந்தசேன | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எஸ் ஏ ஜெயவர்த்தன | உதவிக் கண்காணிப்பாளர் | மீளளிப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவு |
| திருமதி. பி எச் டி ஏ அத்தநாயக்க | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | மீளளிப்புக் கொடுப்பனவுப் பிரிவு |
| திரு. எம் ஏ டி எல் சிறில் | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. வி கே தம்பகலகே | சிரேஷ்ட்ட உதவிக் கண்காணிப்பாளர் | பொதுமக்கள் தொடர்புகள், விசாரணைகள் பீடம் மற்றும் அழைப்பு நிலையம் |

# 1. பொருளாதார மீளாய்வு 2014

## 1.1 பொருளாதார வளர்ச்சி மற்றும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள்

மீள்தளப்படுத்தப்பட்ட தேசிய கணக்குகள் புள்ளிவிபரங்களின்படி (அடிப்படையாண்டு 2010), 2014[1] இல் இலங்கையின் பொருளாதாரம் 2013இல் பதிவுசெய்யப்பட்ட 3.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.9 சதவீதம் கொண்ட உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியை எய்தியது. 2014 இல் மொ.உ.உற்பத்தியில் 56.3 சதவீதத்திற்கு வகைகூறும் பணிகள் நடவடிக்கைகள் 2013இன் 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெறுமதிசேர் நியதிகளில் 5.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு நிதியியல் பணிகள் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் மேம்பட்ட செயலாற்றமே முக்கிய காரணமாகும். மொ.உ.உற்பத்தியில் 26.7 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கைத்தொழில் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் 4.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் பெறுமதிசேர் நியதிகளில் 3.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளராக கட்டுமான நடவடிக்கைகள் விளங்கிய வேளையில் தயாரிப்பு நடவடிக்கைகளிலுள்ள உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகளும் கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு கணிசமானளவிற்குப் பங்களித்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.8 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள், மோசமான வானிலை நிலைமைகளுக்கிடையிலும் உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சிக்கு சாதகமான முறையில் பங்களித்தன. வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் பெறுமதிசேர் நியதிகளில் 4.9 சதவீதமாகக் காணப்பட்டது.

**வரைபடம் 9: உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி**




மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

மேம்பட்ட வழங்கல் நிலைமைகளையும் நிருவகிக்கப்பட்ட விலைகளின் கீழ் நோக்கிய திருத்தங்களையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2014ஆம் ஆண்டு முழுவதும் பணவீக்கம் தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்டது. வெளிநாட்டுத் துறையில், சவால்மிக்க நிலைமைகள் காணப்பட்ட போதும், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், பணவனுப்பல்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகம் என்பனவற்றிலிருந்தான உயர்ந்த உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை, 2013இன் மொ.உ.உற்பத்தியின் 3.8 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 2.7 சதவீதத்திற்கு குறைவடையப் பங்களித்தன. இறைத் துறையில், அரச அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை, 2013[2] இன் 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## 1.2 பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2013 திசெம்பரின் 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் 2.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. பணவீக்கத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பிற்கு, ஆண்டின் பிற்பகுதியில் மின்வலு நீர், பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு என்பனவற்றின் நிருவகிக்கப்பட்ட விலைகளைக் குறைப்பதற்கு அரசாங்கத்தினை இயலச்செய்த பன்னாட்டுப் பண்ட விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படை விலை அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் 2013 இறுதியின் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 திசெம்பரில் 3.2 சதவீதம் வரையில் உயர்வடைந்தது.

குறைவடைந்த பணவீக்க சூழலைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி, 2014ஆம் ஆண்டுப் பகுதியில், ஒப்பீட்டு ரீதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்ந்தும் பின்பற்றியது. 2014 சனவரியில், மத்திய வங்கி துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினை 8.0 சதவீதத்திற்கு 50 அடிப்படைப்

**வரைபடம் 10: ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் (கொநுவி சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்டது; 2006/07=100)**




மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்



1 இது பின்னர் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 4.8 சதவீதத்திற்கு கீழ் நோக்கித் திருத்தப்பட்டது.
2. இப்பேரண்டப் பொருளாதார புள்ளிவிபரங்களில் சில பின்னர் திருத்தப்பட்டன.

புள்ளிகளினால் குறைத்த வேளையில் துணைநில் வைப்பு வசதி வீதம் இவ்வாண்டுப் பகுதியில் மாற்றமின்றி 6.50 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சலை ஊக்குவிக்கும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி, 2014 செத்தெம்பரில் 5.00 சதவீதத்திலமைந்த குறைந்த வீத சிறப்பு துணைநில் வைப்பு வசதியினை அறிமுகப்படுத்தியது. ஒப்பீட்டு ரீதியில் தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளினூடாகக் கிடைத்த நன்மைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில், குறுங்கால பணச் சந்தை வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. இதன்படி, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 2013 இறுதியின் 7.66 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் 6.21 சதவீதத்திற்கு 145 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தில் ஏற்படும் அசைவுகளின் நெருங்கிய பிம்பமாகக் கருதப்படும் ஓரிரவு இலங்கை வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் 2014 இறுதியில் 6.10 சதவீதத்திற்கு 166 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது.

**வரைபடம் 11: தெரிந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்வழங்கல் வீதங்களும் கணிசமான அளவிற்கு கீழ் நோக்கிப் பெயர்ந்தன. தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் 2013 இறுதியின் 15.18 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 11.91 சதவீதத்திற்கு 327 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. சந்தைக் கடன்வழங்கல் வீதங்களில் ஏற்பட்ட குறைப்பிற்கு பதிலிறுத்தும் விதத்தில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2014 இறுதியில் மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பியது.

## 1.3 சம்பளங்கள் மற்றும் தொழிலின்மை

2014இல் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 4.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.3 சதவீதமளவில் சற்று வீழ்ச்சியடைந்தது. தொழிலின்மை வீதத்தில் ஏற்பட்ட குறைப்பிற்கு புதிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் ஒட்டுமொத்த தொழிற்படையின் வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டமையே காரணமாகும். எனினும், தொழிற்படைப் பங்கேற்பு வீதம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு வேலை செய்கின்ற வயதுக் குடித்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு தொழிற்படையின் அதிகரிப்பினைவிட உயர்வாக இருந்தமையே காரணமாகும். பணிகள் துறையும் கைத்தொழில் துறையும் இவ்வாண்டுப் பகுதியில் பெருமளவு தொழில்நிலை உருவாக்கத்திற்கு வகைகூறிய வேளையில், வேளாண்மைத் துறையில் தொழில் புரிந்தவர்களின் எண்ணிக்கை பங்கு வீழ்ச்சியடைந்தது. அரச துறையின் தொழில்நிலையும் அதேபோன்று வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக நாட்டை விட்டு சென்றோரினதும் மொத்த எண்ணிக்கை 2014ம் ஆண்டுப் பகுதியில் அதிகரித்தது.

பணவீக்கத்தில் ஏற்பட்ட குறைப்புடன் சேர்ந்த பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, 2014இல் அரச மற்றும் தனியார் துறை இரண்டிலுமுள்ள ஊழியர்களுக்கான உண்மைக் கூலி வீதங்கள் உயர்வடைவதற்கு வழிவகுத்தது. அரச துறை ஊழியர்களுக்கான பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படிகளுக்குச் செய்யப்பட்ட சீராக்கமும் 2015 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் ரூ.3,000 கொண்ட இடைக்காலப் படியொன்று செலுத்தப்பட்டமையுமே தூண்டுதலாக அமைந்தது. முறைசார்ந்த தனியார் துறையில், வேளாண்மைத் துறையின் கூலி வீதச் சுட்டெண்கள் 2.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தமையின் காரணமாக பெயரளவுக் கூலி வீதங்கள் மிதமாக அதிகரித்த வேளையில் கைத்தொழில் மற்றும் வர்த்தகம்; மற்றும் பணிகள் துறைக்கான கூலி வீதச் சுட்டெண்கள் முறையே 8.4 சதவீதத்தனாலும் 3.2 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

## 1.4 நாணயக் கொள்கை

தாழ்ந்த பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்களின் காரணமாக மத்திய வங்கி 2014ஆம் ஆண்டு முழுவதும் ஒப்பீட்டு ரீதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையொன்றினைத் தொடர்ச்சியாகப் பேணியது. 2014 சனவரியில், மத்திய வங்கி துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினை 50 அடிப்படைப் புள்ளிகளினால் 8.00 சதவீதமாகக் குறைத்த வேளையில் துணைநில் வைப்பு வசதி வீதத்தினை மாற்றமின்றி 6.50 சதவீதத்தால் பேணியதன் மூலம் துணைநில் வீத வீச்சு 150 அடிப்படைப் புள்ளிகளுக்குச் சுருக்கப்பட்டது. துணைநில் வீச்சு சுருக்கப்பட்டமையானது நிதியியல் சந்தைகளில் வட்டி வீத வீச்சுக் குறைப்பினை நோக்கமாகக் கொண்டிருந்தது. மேலும், ரூபாக் கொடுக்கல்வாங்கலில் மத்திய வங்கியின் பூஜ்ய கொடுகடன் இடர்நேர்வினைப் பரிசீலனையில் கொண்டு, துணைநில் வைப்பு வசதி வீதம் 2014 பெப்புருவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிணையற்றதாக்கப்பட்டதுடன், வர்த்தக வங்கிகளிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்குப் பிணைகள் வழங்கப்படுகின்ற மத்திய வங்கியின் முன்னைய கடப்பாடுகள் இல்லாமல் செய்யப்பட்டன. 2014 சனவரியில் மத்திய வங்கி, 2013 ஓகத்து 30ஆம் நாளன்று விதிக்கப்பட்ட குறிப்பிட்ட வகை உந்து ஊர்திகளின் இறக்குமதியின் பொருட்டு வர்த்தக வங்கிகளில் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்திற்குகெதிரான 100 சதவீத குறைந்தபட்சக் காசு அளவுத் தேவைப்பாட்டினை நீக்கியது. 2014 செத்தெம்பரில், 6.5 சதவீதம் கொண்ட துணைநில் வைப்பு வசதி வீதத்தில் மத்திய வங்கியில் மிகையான திரவத்தன்மையினை தொடர்ச்சியாக வைப்புச் செய்யும் பங்கேற்பாளர்களுக்கு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை ஊக்கம் குன்றச் செய்யும் பொருட்டு துணைநில் வைப்பு வசதி வீதத்தினை எந்தவொரு திறந்த சந்தைத் தொழிற்பாட்டு பங்கேற்பாளரும் கலண்டர் மாதமொன்றில் மூன்று தடவைகள் மட்டுமே அணுகத்தக்க விதத்தில் மத்திய வங்கி அதனை ஒழுங்குபடுத்தியிருக்கிறது. மாதமொன்றிற்கு மூன்று தடவைகளுக்கு மேல் துணைநில் வைப்பு வசதியை அணுகும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு பங்கேற்பாளரொருவர் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு, ஆண்டொன்றிற்கு 5.0 சதவீதம் கொண்ட சிறப்பு வட்டி வீதத்தில் நிதிகளை வைப்புச் செய்ய அனுமதிக்கப்பட்டார். இவ்வழிமுறைகள் பொருளாதாரத்தில் மற்றைய சந்தை வட்டி வீதங்களுக்கும் காத்திரமான முறையில் பரிமாற்றப்பட்டமையின் காரணமாக சந்தை வட்டி வீதங்கள் இவ்வாண்டுப் பகுதியில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன.

## 1.5 இறைக் கொள்கை

2014இல் இறைக் கொள்கையானது, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 5.2 சதவீதத்திற்கு மேலும் குறைப்பதனை இலக்காகக் கொண்டிருந்த போதும், அரசின் அரசிறை எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக இருந்தமையின் காரணமாக நம்பப்பட்ட இலக்கிலிருந்தும் குறிப்பிடத்தக்கதொரு பிறழ்வு அவதானிக்கப்பட்டது. அரசின் அரசிறை 2013இன் மொ.உ.உற்பத்தியின் 13.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் மொ.உ.உற்பத்தியின் 12.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையின் முக்கிய காரணமாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் அதன் செலவினத்தினை சிக்கனப்படுத்திக் கொண்டமையின் மூலம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை குறிப்பிட்டதொரு அளவில் கட்டுப்படுத்தப்பட்டது. இதன்படி, மீண்டெழும் செலவினமும் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2013இன் முறையே 13.9 சதவீதம் மற்றும் 5.4 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் 2014இல் முறையே மொ.உ.உற்பத்தியின் 13.5 சதவீதத்திற்கும் 4.8 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

2014இல் மூலவள இடைவெளியினை நிதியிடுவதற்கு முக்கியமாக உள்நாட்டு மூலங்கள் பங்களித்தன. இதன்படி, இவ்வாண்டில் மொத்த நிதியிடல் தேவைப்பாட்டில் உள்நாட்டு நிதியிடல் 64.1 சதவீதத்திற்கு (ரூ.378.7 பில்லியன்) வகைகூறிய வேளையில், தேறிய வெளிநாட்டு நிதியிடல் 35.9 சதவீதத்திற்கு (ரூ.212.5 பில்லியன்) பங்களித்தது. உள்நாட்டு நிதியிடல் மூலவளங்களுள் அரசாங்கம் வங்கியல்லாத் துறையின் மீது பெருமளவிற்குத் தங்கியிருந்தது. இது இவ்வாண்டுப் பகுதியின் தேறிய உள்நாட்டு நிதியிடலில் 66.5 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, 2014இல் வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடுகள் 2013இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.297.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.126.9 பில்லியனாக விளங்கி, மொத்தத் தேறிய கடன்பாடுகளில் 2013இன் ரூ.297.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 33.5 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தியது.

## 1.6 அரச பிணையங்கள் சந்தையும் விளைவு வீதங்களின் அசைவுகளும்

சந்தையில் நிலவிய தாழ்ந்த வட்டி வீத அமைப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலுமுள்ள அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் 2014இல் வீழ்ச்சியடைந்தன. ஒப்பீட்டு ரீதியில் தளர்த்தப்பட்ட மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலை, மிகையான திரவத்தன்மை, தாழ்ந்த பணவீக்க மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பன அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் வீழ்ச்சியடையப் பங்களித்தன. முதலாந்தரச் சந்தையில் 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு வீதங்கள் 2014இல் முறையே 180 அடிப்படைப் புள்ளிகளினாலும் 201 அடிப்படைப் புள்ளிகளினாலும் 228 அடிப்படைப் புள்ளிகளினாலும் 5.74 சதவீதத்திற்கும் 5.84 சதவீதத்திற்கும் 6.01 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. முதலாந்தரச் சந்தைக்கான நீண்ட காலங்களைக் கொண்ட (20 இலிருந்து 30 ஆண்டுகள்) திறைசேரி முறி முதிர்ச்சிகளின் விளைவு வீதங்கள் 11.32 சதவீதத்திலிருந்து 11.75 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்ட வேளையில் 5 ஆண்டு முதிர்ச்சிக்கும் குறைவான திறைசேரி முறிகள் இவ்வாண்டுப் பகுதியில் வழங்கப்படவில்லை.

இரண்டாந்தரச் சந்தையில், 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்கள் 2013 இறுதியில் அவதானிக்கப்பட்ட 7.52 - 8.27 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் 5.72 - 6.04 சதவீத வீச்சில் காணப்பட்டன. திறைசேரி முறிகள் மீதான இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களும் இவ்வாண்டுப் பகுதியில் இதையொத்த தன்மையினைக் கொண்டிருந்ததுடன் இதற்கு நீண்ட கால முதிர்ச்சிகளுக்கு முதலீட்டாளர்கள் காட்டிய முன்னுரிமையும் உதவியாக அமைந்தது. இதன்படி, திறைசேரி முறிகள் மீதான இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களும் கூட 2013 இறுதியில் 8.86 - 11.54 சதவீத வீச்சிலிருந்து 2014ஆம் ஆண்டுப் பகுதியில் 6.22 - 9.27 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 12: அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதம்**




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

# 2. ஊழியர் சேமலாப நிதிய செயலாற்றத்தின் மீளாய்வு

2014 இறுதியில் நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.1,487 பில்லியனை அடைந்து, 2013 இறுதியில் காணப்பட்ட ரூ.1,300 பில்லியனை விட 14.4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2014 இறுதியில் 15.8 மில்லியனை அடைந்தது. 2013 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 15.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 3.9 சதவீதமான அதிகரிப்பாகக் காணப்பட்டது. பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2014 இறுதியில் 2.4 மில்லியனாக விளங்கி 2013 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட அதே எண்ணிக்கையை ஒத்ததாகக் காணப்பட்ட வேளையில், பங்களிக்காத உறுப்பினர் கணக்குகள் 2013 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் 13.4 மில்லியனாக அதிகரித்தது. அதேவேளை, பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2013 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 69,148 இலிருந்து 2014 இறுதியில் 69,683 இற்கு 0.77 சதவீதம் கொண்ட சிறிய அளவிலான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

## 2.1 உறுப்பினர் பங்களிப்பும் ஓய்வுகால நன்மைகளின் கொடுப்பனவுகளும்

2014இல் உறுப்பினர் பங்களிப்பு 2013இன் ரூ.80.2 பில்லியனிலிருந்து ரூ.90.0 பில்லியனுக்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்தது. உறுப்பினர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் மீளளிப்பு நன்மைகளாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 2014இல் ரூ.65.1 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2013இல் செலுத்தப்பட்ட ரூ.50.2 பில்லியனைவிட 29.7 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதன்படி, தேறிய பங்களிப்பு (மீளளிப்பு நன்மைகளைக் கழித்த மொத்தப் பங்களிப்பு) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.29.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.24.9 பில்லியனுக்கு 20.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட தேறிய பங்களிப்புக்கள் 2014இலும் தொடர்ந்தும் அதிகரித்த போதும், பங்களிப்பின் வளர்ச்சி மீளளிப்புக் கொடுப்பனவுகளிலும் பார்க்க குறைந்த வீதத்தில் காணப்பட்டதன் விளைவாக தேறிய பங்களிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஓய்வுபெற்ற வயதினை அடைந்த ஓய்வு பெற்றவர்களுக்குச் செய்யப்பட்ட மீளளிப்பு, நன்மைகளின் மீளளிப்பில் பெரும் பங்கிற்கு வகைகூறிய வேளையில் அதற்கடுத்ததாக பெண்களின் திருமணம் காரணமாக ஏற்பட்ட மேற்கொள்ளப்பட்ட மீளளிப்பு காணப்பட்டது.

## 2.2 ஊ.சே. நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2013இன் ரூ.1,257.3 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.1,437.7 பில்லியனுக்கு (வரைபடம் 13) 14.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

**வரைபடம் 13: முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு**




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2: ஊ.சே. நிதிய மீளளிப்பு கொடுப்பனவு - 2014**

| ஊ.சே. நிதிய மீளளிப்பிற்கான காரணம் | மீளளிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | மீளளிப்பு நன்மைகளின் மொத்தத் தொகை (அ) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | தொகை (ரூ.பில்) | % |
| ஓய்வூதிய வயதினை அடைந்தமை | 79,673 | 62.27 | 44.55 | 68.40 |
| திருமணம் காரணமாக ஓய்வுபெற்றமை | 24,165 | 18.89 | 5.31 | 8.15 |
| புலம்பெயர்ந்தமை | 1,896 | 1.48 | 2.55 | 3.92 |
| மருத்துவ காரணங்கள் | 1,027 | 0.80 | 0.59 | 0.90 |
| உறுப்பினரின் மரணம் | 4,497 | 3.51 | 2.10 | 3.23 |
| ஓய்வூதிய தொழிலொன்றில் இணைந்து கொண்டமை | 15,745 | 12.31 | 8.99 | 13.80 |
| ஏனையவை | 948 | 0.74 | 1.04 | 1.60 |
| **மொத்தம்** | **127,951** | **100.00** | **65.13** | **100.00** |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(அ) இது மீளளிப்பின் முதலாவது கொடுப்பனவினை மட்டுமே உள்ளடக்குவதுடன் பகுதிக் கொடுப்பனவு கோரப்படாத கொடுப்பனவு மற்றும் பிடித்துவைக்கப்பட்ட கொடுப்பனவுகளைத் தவிர்க்கிறது.

முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முதலீடுகள் மீதான வருவாயும் தேறிய உறுப்பினர் பங்களிப்புக்களுமே முக்கிய தூண்டுதலாக அமைந்தன.

அரச பிணையங்களில் காணப்பட்ட முதலீடுகளின் குவிவு 2013இன் 92.5 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 91.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதன் பயனாக பங்குரிமை மூலதனத்தில் முதலீட்டின் பங்கு 2013இல் காணப்பட்ட 5.8 சதவீதத்திலிருந்து 6.7 சதவீதமாக அதிகரித்ததுடன் 1.5 சதவீதம் கம்பனித் தொகுதிக் கடன்களிலும் எஞ்சியது 0.6 சதவீதம் நிதியத்தின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் விதத்திலும் அரச பிணையங்கள் மீதான நேர்மாற்று மீள்கொள்வனவு போன்ற உயர் திரவத்தன்மை வாய்ந்த சொத்துக்களிலும் வைப்புச் செய்யப்பட்டன.

### 2.2.1 அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல்

திறைசேரி முறிகள், ரூபாக் கடன்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல் 2013ன் இறுதியின் ரூ.1,163.6 பில்லியனிலிருந்து 2014ன் இறுதியில் ரூ.1,310.6 பில்லியனாக 12.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2014ன் இறுதியில் திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்களின் சொத்துப்பட்டியல் மொத்தச் சொத்துப்பட்டியலில் 89.6 சதவீதமாகக் காணப்பட்டது.

இக்காலப்பகுதியில், அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலில் ரூபாக் கடன்களின் பங்கு 1.8 சதவீதத்திலிருந்து 1.6 சதவீதமாகச் சற்றே வீழ்ச்சியடைந்தமைக்கு திறைசேரி முறிகள் மற்றும் பங்குரிமை மூலதனங்களிலான முதலீடு அதிகரித்தமையும் ரூபாக் கடன்களில் காணப்பட்ட பூச்சிய தேறிய முதலீடுமே காரணமாகும்.

2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஊ.சே. நிதியம் வட்டி வருமானமாகவும் கடன் தீர்ப்பனவு இலாபமாகவும் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலிலிருந்தான மூலதன இலாபமாகவும் ரூ.155.1 பில்லியனை ஈட்டியதன் மூலம் நிதியத்தின் மொத்த வருமானத்தில் 95.0 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. 2014இல் சராசரி அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல் மீதான வருமானத்தின் தேறல் வீதம் 12.5 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில், 2014ன் இறுதியில் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு 11.1 சதவீதமாகக் காணப்பட்டது. அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு மொத்த அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலில், 31.2 சதவீதம் அடுத்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் முதிர்ச்சியடையவுள்ளன.

### 2.2.2 கம்பனிப் பங்குகளின் சொத்துப்பட்டியல்

கம்பனிப் பங்குகளில் சொத்துப் பட்டியலில் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிப் பங்குகள் இரண்டினையும் உள்ளடக்கியது. பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய முதலீடு காரணமாக 2013இன் சொத்துப் பட்டியல் ரூ.72.8 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.96.6 பில்லியனுக்கு ரூ.23.8 பில்லியனால் (32.7 சதவீதம்) அதிகரித்தமைக்கு பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்கள் இரண்டிலும் மேற்கொள்ளப்பட்ட புதிய முதலீடுகளும் ஊ.சே. நிதியம் ஏற்கனவே முதலீடு செய்யப்பட்டிருந்த கம்பனிகளில் செய்யப்பட்ட முதலீடுகளும் காரணமாயமைந்தன. பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் ரூ.94.7 பில்லியன் கொண்ட வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலையும் உள்ளடக்கிய கம்பனிப் பங்குச் சொத்துப்பட்டியல் 2014 இறுதியிலுள்ளவாறு ரூ. 94.7க்கான பங்கு முதலீட்டு பட்டியலிலும் ரூ.1.9 பில்லியன் வர்த்தகச் சொத்துப் பட்டியலையும் கொண்டது.

ஊ.சே.நிதியத்தால் "விற்பனைக்காக வைத்திருக்கும் முதலீட்டுச் சொத்துப் பட்டியல்" இந்த ஆண்டிலும் தொடர்ந்தும் சீரான பன்முகப்படுத்தலுடன் கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட வங்கித்தொழில், நிதி மற்றும் காப்புறுதி, சுற்றுலா விடுதி மற்றும் பயணங்கள், பன்முகப்படுத்தப்பட்ட கம்பனிகள், தயாரிப்பு, கட்டுமானம் மற்றும் பொறியியல், மின்சக்தி மற்றும் வலுசக்தி மற்றும் தொலைத்தொடர்பு ஆகிய பிரிவுகளில் பிரதானமாக நிலைப்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டது. மூலதன இலாபத்தை சந்தை விலையுடன் மதிப்பிட்டுக் கிடைத்த இலாபம்/நட்டம் ஊடாக இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் சராசரிப் பெறுமதியிலான கம்பனிப் பங்குகள் முதலீட்டுச் சொத்துப் பட்டியலில் 2014ல் காணப்பட்ட ரூபா 5.7 பில்லியன் வருவாயை ஈட்டியது. அது 2013ம் ஆண்டில் ஈட்டிய ரூபா 3.3டன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 72.7 வீத வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

**வரைபடம் 14: பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் துறைவாரியான உள்ளமைப்பு**




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 3: அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு - 2014ன் முடிவில் உள்ளவாறு**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதித் தொகை (ரூ.பில்லியன்) | பங்களிப்பு (%) | சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டிற்கு குறைவானது | 102.3 | 6.9 | 9.8 |
| 1 - 2 ஆண்டுகள் | 157.3 | 10.7 | 9.9 |
| 3 - 4 ஆண்டுகள் | 199.9 | 13.6 | 10.7 |
| 5 ஆண்டுகளுக்குக் கூடுதலானது | 1,014.7 | 68.8 | 11.6 |
| மொத்தம் | 1,474.2 | 100.00 | 11.1 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### 2.2.3 கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியல்

ஊ.சே.நிதியம் கம்பனித் தொகுதிக் கடன்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் ஈட்டு உத்தரவாதப் பிணையங்கள் போன்ற முதலீட்டுத் தரம் கொண்ட கம்பனிப் படுகடன் சாதனங்களில் முதலீடு செய்துள்ளது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் சந்தையில் பட்டியலிடப்பட்ட 06 கம்பனிப் படுகடன் வழங்கல்களில் முதலீடு செய்தது. நிதியத்தின் கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியல் 2014 திசெம்பர் 31இல் ரூ.22.3 பில்லியனாக விளங்கியதுடன் இது மொத்தச் சொத்துப்பட்டியலின் 1.5 சதவீதம் மட்டுமேயாகும். நிதியமானது கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியலிலிருந்து ரூ.2,051 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை உழைத்ததுடன் சராசரி சொத்துப்பட்டியல் மீதான வருவாய் வீதம் ஆண்டொன்றிற்கு 11.50 சதவீதமாகக் காணப்பட்டது.

### 2.2.4 நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

நிதியத்தின் திரவத்தன்மையினை முகாமைப்படுத்தும் பொருட்டு, நாளாந்த மிகை நிதியம் மீள்கொள்வனவுச் சந்தையில் முதலீடு செய்யப்படுகின்றது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில், நிதியமானது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து ரூ.327 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை ஈட்டிக் கொண்டது.

### 2.2.5 நிதியத்தின் வருமானம்

2014இல் நிதியத்தின் மொத்த வருமானம் ரூ.163.2 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது (அட்டவணை 4). வட்டி வருமானமே நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (78.1 சதவீதம்) காணப்பட்டது. வட்டி வருமானம் 2013இன் ரூ.105 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.127.5 பில்லியனாக 21.4 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபப் பெறுகைகள் என்பனவற்றை உள்ளடக்கிய பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் 2013இல் உழைக்கப்பட்ட ரூ.3,294 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.5,687 மில்லியனாக 67.7 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், கழிவிடப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்தான கடன் தீர்ப்பனவு இலாபம் 2013இன் ரூ.27.0 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.25.9 பில்லியனாக 4.2 சதவீதத்தினால் குறைவடைந்தது (அட்டவணை 4).

### 2.3 தொழிற்படு செலவினம்

2014இல் நிதியத்தின் மொத்த தொழிற்படு செலவினம் ரூ.1,042.9 மில்லியனாக விளங்கி 2013இன் ரூ.978.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 6.53 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு நிருவாகச் செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இருப்பினும், நிதியமானது அதன் மொத்தத் தொழிற்படு செலவினத்தை அதன் மொத்த வருமானத்தின் 0.64 சதவீதத்திற்குக் குறைத்துக் கொள்ள முடிந்தது. 2013இல் இது 0.72 சதவீதமாகக் காணப்பட்டது. தனிப்பட்ட நிதிய முகாமையாளர்களினால் 1 இலிருந்து 2 சதவீதம் வரையிலான முகாமைத்துவக் கட்டணம் விதிக்கப்படுவதைக் கருத்திற் கொள்கையில், தொழிற்படு செலவினத்தினை மொத்த வருமானத்தின் 1 சதவீதத்திற்குள் பேணக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதொரு சாதனையேயாகும்.

### 2.4 வரிச் செலவினம்

2014இல் ஊ.சே. நிதியம் ரூ.12,169 மில்லியனை வருமான வரியாகச் செலுத்தியது. இதனை 2013இன் வருமான வரிக் கொடுப்பனவான ரூ.10,068 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 20.87 சதவீதனதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

### 2.5 உறுப்பினர் கணக்கு நிலுவைகளும் செலுத்தப்பட்ட வட்டியும்

2014இல் ரூ.137.3 பில்லியன் வட்டியாக உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டமையினால் உறுப்பினர் நிலுவைகள் 2013இன் ரூ.1,281.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,445.5 பில்லியனுக்கு 12.8 சதவீதத்தினால் அதிகரித்தது. குறைவடைந்து செல்லும் வட்டி வீதச் சூழலுக்கிடையிலும் நிதியமானது 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்காக 10.5 சதவீதம் கொண்ட வட்டி வீதத்தினைப் பிரகடனப்படுத்தக் கூடியதாயிருந்தது.

**அட்டவணை 4: முதலீட்டு வருமானம்**

| வருமான மூலங்கள் | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.மில்) | பங்கு (%) | தொகை (ரூ.மில்) | பங்கு (%) |
| வட்டி | 105,038 | 77.0 | 127,499 | 78.1 |
| கடன்திரட்டு வருவாய்கள் | 26,956 | 19.8 | 25,897 | 15.9 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | 1,019 | 0.7 | 4,082 | 2.5 |
| சந்தை விலைமதிப்பீட்டில் பெற்ற இலாபம்/நட்டம் | (45) | - | 89 | 0.1 |
| கம்பனிப் பங்குகள் மூலம் கிடைத்த மூலதன இலாபம் | 113 | 0.1 | 2,277 | 1.4 |
| பங்கிலாபங்கள் | 3,226 | 2.4 | 3,321 | 2.0 |
| ஈட்டுப் பத்திர விடுவிப்பிலான விலை/(குறை விலை) | (4) | - | - | - |
| | - | - | - | - |
| மொத்தம் | 136,303 | 100.0 | 163,165 | 100.0 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5: தொழிற்படு செலவினம்

| விடயம் | மத்திய வங்கியின் நாணயச் சபை | | | தொழில் திணைக்களம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 (ரூ. மில்.) | 2014 (ரூ. மில்.) | மாற்றம் (%) | 2013 (ரூ. மில்.) | 2014 (ரூ. மில்.) | மாற்றம் |
| ஆளணிச் செலவினங்கள் | 334 | 318 | (4.79) | 235 | 260 | 10.63 |
| நிர்வாகச் செலவினங்கள் | 237 | 272 | 14.77 | 127 | 149 | 17.32 |
| ஏனைய செலவினங்கள் | 33 | 30 | (9.09) | 12 | 13 | 8.33 |
| மொத்தம் | 604 | 620 | 2.64 | 374 | 422 | 12.83 |
| மொத்த செலவுகள் சராசரி வருமானத்தின் % ஆக | 0.44 | 0.38 | | 0.27 | 0.26 | |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 15: உறுப்பினர் நிலுவைகளும் செலுத்தப்பட்ட வட்டியும்




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 2.6 இடர்நேர்வு முகாமைத்துவம்

### 2.6.1. ஆய்வுக் கண்ணோட்டம்

ஊ.சே. நிதியமானது இலங்கையின் நிதியியல் துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிதியமாக விளங்கி வருவதுடன் தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வூதிய நன்மைகளை வழங்கும் விதத்தில் நீண்டகாலச் சேமிப்புக்களை முகாமை செய்தும் வருகின்றது. ஆகவே, நிதியத்துடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவது உறுப்பினர்களுக்கும் அவ்வாறே நாட்டின் முழு நிதியியல் முறைமைக்கும் மிகமுக்கியமானதாகும். ஊ.சே. நிதியம் இடர்நேர்வு முகாமைத்துவத்தை அதன் முதலீடுகள், தொழிற்பாடுகள் மற்றும் கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் செயற்பாட்டின் முக்கியமானதொரு கூறாக உள்ளடக்கியிருக்கிறது. ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான இதன் கடப்பாடு காரணமாக ஊ.சே. நிதியம் இப்பிராந்தியத்தில் மிகக் கவனம் மிக்கதொரு ஓய்வூதிய நிதியமாக இதனைத் திகழச் செய்ய வேண்டுமென்ற அதன் தொலைநோக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய மிகச் சிறந்த செயலாற்றத்தினை பேணக்கூடியதாக இருப்பதால் உறுப்பினர்கள் நிறைவானதொரு ஓய்வுக் காலத்தை அனுபவிக்கக் கூடியதாகவுள்ளது.

முதலீட்டுக் கொள்கை அறிக்கையும் முதலீட்டு வர்த்தகப்படுத்தல் வழிகாட்டலும் ஊழியர் சேம நிதியம் தாங்கக்கூடிய இடர்நேர்வுகளின் மட்டத்தினை வரைவிலக்கணம் செய்வதுடன் முதலீடுகளுக்காக நிதி ஒதுக்கப்படும் அடிப்படையையும் உருவாக்குகின்றன. நிதியமானது ஊ.சே.நிதியத்தின் இடர்நேர்வு வரையறைக்குள் செய்யப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் சொத்துக்களின் ஒதுக்கீடுகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன. நிதியத்தினால் எதிர்நோக்கப்படும் முக்கிய இடர்நேர்வுகளாகக் கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்படு இடர்நேர்வு என்பன காணப்படுகின்றன.

### 2.6.2 கொடுகடன் இடர்நேர்வு

கொடுகடன் இடர்நேர்வென்பது கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பு தமது கொடுப்பனவுக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய இயலா திருத்தல் அல்லது விரும்பாதிருப்பதால் ஏற்படும் இழப்பின் இடர்நேர்வாகும். நிதியத்தின் முதலீடுகள் 92 சதவீதம் அரச பிணையங்களில் காணப்படுவதனால் அதன் கொடுகடன் இடர் நேர்வு மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. மேலும், நிதியமானது இடர்நேர்வு வருவாய் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்ட முழுமையான ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் உயர்ந்த நம்பகத்தன்மை கொண்ட கம்பனிப் படுகடன் சாதனங்களில் (முதலீட்டுத் தரம்) முதலீடு செய்துள்ளது. மேலும், நிதியத்தின் அனைத்து நேர்மாற்று மீள்கொள்வனவு முதலீடுகளும் போதுமானளவு அரச பிணையங்களினால் பிணையிடப்பட்டிருக்கின்றன. ஆகவே, நிதியத்தின் கொடுகடன் இடர்நேர்வு மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

### 2.6.3 சந்தை இடர்நேர்வு

வட்டி வீதங்கள், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பங்குரிமை மூலதனங்களின் விலைகளில் ஏற்பட்ட அசைவுகளின் காரணமாக சொத்துப்பட்டியல் மற்றும் நிதியியல் சாதனங்களின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் சந்தை இடர்நேர்வு எனப்படுகிறது. நிதியத்தினால் எதிர்நோக்கப்படும் சந்தை இடர்நேர்வு வட்டி வீத இடர்நேர்வு மற்றும் பங்குரிமை மூலதன விலை இடர்நேர்வு என்பனவற்றிலிருந்து தோன்றுகின்றது. திறைசேரி முறிகளின் பெறுமதி அதிகரிக்குமிடத்து சந்தை வட்டி வீத வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் பெறுமதி தேய்வடைகிறது. இதுவே நிதியத்தினால் எதிர்நோக்கப்படும் வட்டி வீத இடர்நேர்வாகும். எனினும், இதனை வேறுபட்ட முதிர்ச்சிகளையும் விளைவுக ளையும் கொண்ட திறைசேரி முறிகளைத் தெரிவுசெய்வதன் மூலமும் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் அளவினை மட்டுப்படுத்துவதன் மூலமும் காலத்திற்குக் காலம் சொத்துப் பட்டியலை மீளச் சமநிலைப்படுத்துவதன் மூலமும் கட்டுப்படுத்த முடியும்.

பங்குரிமை மூலதன விலை இடர்நேர்வென்பது, பங்கு விலைகளில் ஏற்படும் வீழ்ச்சியின் காரணமாக பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் பெறுமதியில் ஏற்படும் குறைவாகும். இது உயர்ந்த விலைகளில் இவற்றை விற்பதுடனும் தாழ்ந்த விலைகளில் இவற்றை மீண்டும் வாங்குவதுடனும் தொடர்புபட்ட முதலீட்டு உபாயமொன்றினூடாக குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் வங்கித்தொழில், நிதி மற்றும் காப்புறுதி, சுற்றுலாவிடுதி மற்றும் பயணங்கள், கட்டடவாக்கம் மற்றும் பொறியியல், தயாரிப்பு மற்றும் தொடர்பாடல் உள்ளிட்ட வேறுபட்ட துறைகளில் பன்முகப் படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், பங்குரிமை மூலதனச் சந்தையின் வெளிப்படுத்துகை நிதியத்தின் மொத்தச் சொத்துப்பட்டியலில் ஏறத்தாழ 6 சதவீதமாக மாத்திரம் இருப்பதனாலும் நிதியமானது அதன் சொத்துப்பட்டியலுக்கு காலத்திற்குக் காலம் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்வதனாலும் பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் மீதான இடர்நேர்வு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகிறது.

### 2.6.4 திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை இடர்நேர்வு என்பது ஊ.சே. நிதியம் உரிய திகதியில் அதன் நிதியியல் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் பூர்த்தி செய்ய இயலாதிருப்பதன் காரணமாகத் தோன்றுகின்றது. இவ்வாண்டுப் பகுதியில் நிதியத்தின் தேறிய பங்களிப்பு மாதமொன்றிற்கு ரூ.1.5 பில்லியனுக்கும் ரூ.2.0 பில்லியனுக்குமிடையில் காணப்பட்டது. மேலும், வட்டி மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகளும் ஊ.சே. நிதியத்திற்கு மேலதிகக் காசுப்பாய்வினை வழங்குகின்றன. ஊ.சே. நிதியம், நாளாந்த திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் செய்வதற்குப் போதுமான நிதியைப் பேணுவதற்காக நிதியம் கடன் வழங்குநர் என்ற முறையில் ஊ.சே. நிதியம் நேர்மாற்று மீள்கொள்வனவுச் சந்தையில் தீவிரமாக ஈடுபட்டது.

மேலும், நிதியமானது அதன் அனைத்துத் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் பொருட்டு, போதுமான தொகைகள்/ வேறுபட்ட முதிர்ச்சிகளைக் கொண்ட சாதனங்கள் மற்றும் உயர்ந்தளவு திரவத்தன்மை கொண்ட சொத்துக்கள் என்பனவற்றைப் பேணுகின்றது. இதன்படி, நிதியத்தின் திரவத்தன்மை இடர்நேர்வு மிகக் குறைவாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

### 2.6.5 தொழிற்படு இடர்நேர்வு

போதுமானதற்ற அல்லது பழுதடைந்த உள்ளக செயன்முறைகள், மக்கள் அல்லது முறைமைகள் அல்லது வெளிப்புற நிகழ்வு நிலைமைகளினால் தோன்றிய இழப்புக்கள் தொழிற்படு இடர்நேர்வு எனப்படும். நிதியத்தின் உறுப்பினர் கணக்குகள் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் மையப்படுத்தி பதிவு செய்கின்ற முறைமையொன்றில் பேணப்படுகின்ற அதேவேளை இலங்கை மத்திய வங்கியிலுள்ள ஊ.சே. நிதிய முறைமையின் செயன்முறைகளின் பாரிய ஒருங்கிணைப்பிற்கும் வசதியளிப்பதானது குறைந்தபட்ச உழைப்புத் தலையீடுகளுடன் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் தரவுகளின் பெருமளவு துல்லியத்தன்மை என்பனவற்றின் குறிப்பிடத்தக்க முன்னேற்றங் களுக்கு வழிவகுத்தது.

தொழிற்பாட்டு நடவடிக்கைகள் சுயாதீனமான உள்ளகக் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுவதுடன் கணக்காய்வில் கண்டறியப்பட்ட விடயங்கள் பலவீனங்களையும் பிறழ்வுகளையும் உடனடியாக சீர்செய்வதற்காக மாதாந்த அடிப்படையில் கலந்துரையாடப்படுகின்றன. மேலும், நிதியத்தின் தொழிற்படு இடர்நேர்வானது கொடுக்கல்வாங்கல்களுக்கான வரைவிலக்கணப்படுத்தப்பட்ட அதிகாரமட்டம், தொழிற்பாட்டு ரீதியான கைநூல் கிடைக்கத்தக்கதாக உள்ளமை கடவுச் சொல் பாதுகாப்பினூடாக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான கட்டுப்பாடுகள், தனியான முதலீட்டு இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவும் தொழிற்பாட்டு ரீதியான இடர்நேர்வுப் பதிவேடுகளும் பேணப்பட்டு வருகின்றமை போன்றவற்றினூ டாக முகாமைப்படுத்தப்பட்டு வருகின்றது. உறுப்பினர் கணக்குகளைப் பேணுவதற்காக கணனி வழி அதேநேர பின்னூ ட்டல் முறைமையொன்றினைப் பேணுவதன் மூலம் தொழிற்படு இடர்நேர்வு மேலும் குறைக்கப்பட்டதுடன் நிதியம் அதன் தொழிற்பாடுகளை எந்தவித தடங்கலுமில்லாமல் மேற்கொள்ள முடிந்தது. மேலும், எதிர்பாரா நிகழ்வுகள் ஏதும் ஏற்படும் சந்தர்ப்பத்தில் தொழிற்பாடுகள் சுமுகமாக தொழிற்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தடங்கலற்ற வியாபாரத் திட்டமும் அனர்த்த மீட்பு அமைவிடத் திட்டமும் ஒவ்வொரு ஆண்டும் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, நிதியத்தின் தொழிற்பாட்டு இழப்பு மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

மேலும், ஊ.சே. நிதியம், தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாடுகளிலுள்ள அதன் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்குவதன் மூலம் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகளை முன்மாற்றுவதனையும் ஊ.சே.நிதியத்தின் தீர்மானத்தினை மேற்கொள்ளும் செயன்முறை/ கம்பனி கலாச்சார முறையின் முக்கியமானதொரு பகுதியாக இதனை மாற்றுவதனையும் நோக்காகக் கொண்டிருக்கிறது.

## 2.7 வீடமைப்புக் கடன் வசதி

வீடமைப்புக் கடன் திட்டமானது, உறுப்பினர்கள் பங்கேற்கின்ற கடன்வழங்கல் நிறுவனங்களான வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கி என்பனவற்றிலிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்வதனை வசதிப்படுத்தும் நோக்குடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2014இல் ஊ.சே. நிதியம் உறுப்பினர்களுக்கு அவர்களின் நிலுவைக்கெதிராக 17,786 உத்தரவாதச் சான்றிதழ்களை ரூ.8,021 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக

அட்டவணை 6: வீடமைப்புக் கடன் வசதிகள்

| ஆண்டு | வெளியிடப்பட்ட சான்றிதழ்கள் (எண்) | ஒப்புதலளிக்கப்பட்ட கடன் (ரூ. மில்.) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட தொகை (ரூ. மில்.) |
|---|---|---|---|
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 | 17,786 | 8,021 | 2,394 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு வழங்கியது (அட்டவணை 6). மேலும், 2013ஆம் ஆண்டுப் பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவ செய்வதற்காக தொடர்பான உறுப்பினர்களின் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.2,394 மில்லியன் கழிக்கப்பட்டு பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## 2.8 சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

ஊழியர் சேம நிதியச் சட்டத்திற்கிணங்க, தொழில் திணைக்களம் நிதியத்தின் பொது நிருவாகத்திற்கும் ஊ.சே. நிதியச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கிறது. இதன்படி, 2014ஆம் ஆண்டுப் பகுதியில் மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணை அலுவலகங்களும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி 7,213 புதிய தொழில்தருநர்களையும் 296,056 புதிய ஊழியர்களையும் பதிவுசெய்தது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களில் 65 சதவீதத்திற்கும் கூடுதலானோர் மேல் மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்ட துடன் மொத்த தொழில்தருநர்களின் பதிவுகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தோர் 3 சதவீதமாகக் காணப்பட்டனர்

சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, உறுப்பினர் பங்களிப்புக்களைச் செலுத்தாத தொழில்தருநர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரம் தொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, மாவட்ட தொழில் அலுவலகங்களினாலும் துணை தொழில் அலுவலகங்களினாலும் முறையே ரூ.6,280 மில்லியனையும் ரூ.1,121 மில்லியனையும் கோரி முறையே 12,132 முதல் அறிவிப்பும் 13,578 சிவப்பு அறிவிப்பும் அனுப்பப்பட்டன. மேலும், சிவப்பு அறிவிப்புக் கிடைத்து 28 நாட்களுக்குள் நிலுவைகளைச் செலுத்தத் தவறிய 3,397 நிறுவனங்களுக்கெதிராக வழக்குத் தொடுத்ததன் மூலம் தொழில் திணைக்களம் ரூ.6,126 மில்லியனை அறவிட்டுக் கொண்டது.

## 2.9 ஊ.சே. நிதிய உறுப்பினர்களை மீள்பதிவு செய்தல்

ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்கு வினைத்திறன்மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் ஊ.சே. நிதியத் திணைக்களமும் தொழில் திணைக்களமும் ஊ.சே. நிதிய உறுப்பினர்களை அவர்களது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு அவர்களது பெயர்களை மீளப்பதிவு செய்து தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தனித்துவமான அடையாள இலக்கமாக வழங்குவதற்காக 2008ஆம் ஆண்டில் சிறப்புச் செயற்றிட்டமொன்றினை மேற்கொண்டது. இதனால் இரண்டு நிறுவனங்களையும் பொதுவான உறுப்பினர் மத்திய தரவுத் தளமொன்றினை பயன்படுத்தக் கூடியதாக இருந்தது.

2014 இறுதியில் ஏறத்தாள 1.6 மில்லியன் செயற்படுகின்ற ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் (பங்களிப்புச் செலுத்துகின்ற உறுப்பினர்கள்) தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இதில் உறுப்பினர் கணக்குகளில் 77 சதவீதத்திற்கு (1.2 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள வேளையில் சேகரிப்பட்ட தரவுகளுக்கும் ஏற்கனவேயுள்ள தரவுகளுக்குமிடையிலான வேறுபாடுகள் தொடர்பில் ஊழியர்களின் தொழில்தருநர்களிடமிருந்து பெறப்பட்ட சரிபார்ப்புக்களின் மூலம் எஞ்சிய உறுப்பினர்களின் விபரங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்கால அடிப்படையில் தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ் புதிய ஊ.சே. நிதிய உறுப்பினர்களைப் பதிவு செய்தல் 2010 நவம்பரில் ஆரம்பமானது. இதற்கமைய, ஒவ்வொரு மாதமும் முதற்தடவையாக ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களைப் பெறும் புதிய உறுப்பினர்கள் தேசிய அடையாள அட்டை விபரங்களை பெற்றுக் கொள்வதற்காக மாதாந்தக் கண்காணிப்பு முறைமையொன்று நடைமுறைகிடப்பட்டது.

2014இல் 139,266 உறுப்பினர்கள் அவ்வாறு பதியப்பட்டதுடன் ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 129,891 பேர் புதிய உறுப்பினர் பதிவேட்டில் சேர்க்கப்பட்டனர்.

செயற்படுகின்ற உறுப்பினர்களின் முன்னைய உறுப்பினர் கணக்குகளை தனித்துவமான அடையாள இலக்கத்துடன் இணைக்கின்ற நடவடிக்கைகள் 2014இலும் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் 38,694 முன்னைய உறுப்பினர் கணக்குகள் தனித்துவமான அடையாள இலக்கங்களுடன் இணைக்கப்பட்டன. இவ்வசதியானது உறுப்பினர்கள் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை வழங்குவதன் மூலம் இணையத்தளமூடாகவும், குறுந்தகவல்கள் முறைமையூடாகவும் தமது பல்வேறு கணக்குகளை அணுகவும் அவர்களின் ஊ.சே. நிதிய நிலுவைகளைப் பார்வையிடவும் முடிகிறது.

## 2.10 ஊ.சே. நிதிய கொடுப்பனவுகளுக்கான இ-கூற்று முறைமை

இ-கூற்று முறையினூடாக ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களையும் பங்களிப்பு விபரங்களையும் சமா்ப்பிக்கும் முறை 2012 வரை சுயவிருப்பு அடிப்படையொன்றில் நடைமுறையிலிருந்தது. 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஊ.சே. நிதிய திருத்தச் சட்டத்திலுள்ள தேவையான சட்ட ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்டு 2013 மே மாதத்தில் உரிய அரச வா்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னா் 50 ஊழியா்களுக்கு மேற்பட்டவா்களைக் கொண்ட தொழில்தருநா்களுக்கு விபரங்களை இ.கூற்று அடிப்படையில் சமா்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், ஊ.சே. நிதியத் திணைக்களம் வா்த்தக வங்கிகளை இத்திட்டத்தின் கீழ் சேகரிப்பு முகவா்களாக நியமித்ததன் மூலம் அவற்றிடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொண்டன. இதன்படி, கொமா்ஷல் பாங்க ஒவ் சிலோன் பிஎல்சியும் இலங்கை வங்கியும் அவா்களது வாடிக்கையாளா்களுக்காக முறையே 2011 ஒத்தோபரிலிருந்தும் 2012 செத்தெம்பரிலிருந்தும் இலத்திரனியல் கொடுப்பனவு வசதிகளை அறிமுகப்படுத்தின. 2013இல் மக்கள் வங்கி, சம்பத் வங்கி பிஎல்சி, ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி என்பன இதே முறைமைகளை அறிமுகப்படுத்தியதுடன் நிதியத்திற்கு பங்களிக்கின்ற தொழில்தருநா்களாகவுள்ள தமது வாடிக்கையாளா்களுக்கு பெறுமதிகூட்டப்பட்ட இப்பணிகளை வழங்குவதற்காக ஊ.சே. நிதியத்தின் சேகரிப்பு முகவா்களாக இணைந்து கொண்டன.

நடைமுறையிலுள்ள இ-கூற்று முறைமையின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, தற்கால அடிப்படையில் உறுப்பினா் விபரங்களைச் சரிபாா்ப்பதற்கான புதிய பொறிமுறையொன்று மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் 2014இல் அறிமுகப்படுத்தப்பட்டது. உறுப்பினா் விபரங்களின் செல்லுபடித்தன்மைகளை தன்னியக்கப்படுத்தி கணக்குகளை இற்றைப்படுத்தும் செயன்முறைகளை விரைவுபடுத்துவதன் மூலம் புதிய பொறிமுறையானது மனித உழைப்புத் தலையீடுகளைக் குறைத்துவிடும் என எதிா்பாா்க்கப்படுகிறது. இரண்டு வா்த்தக வங்கிகள் (தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் செலான் வங்கி) புதிய முறையில் இணைந்து கொள்வதற்கான தமது விருப்பத்தினைத் தெரிவித்திருப்பதுடன் தமது வாடிக்கையாளா்களுக்கு இப்பணிகளை வசதிப்படுத்துவதற்காக அவை தொடா்பான தகவல் தொழில்நுட்ப முறைகளை அபிவிருத்தி செய்யும் செயன்முறைகளில் ஈடுபட்டிருக்கின்றன.

தொழில்தருநா்கள் அவா்களது மாதாந்தப் பங்களிப்பினை அவா்களது வங்கியிலிருந்து ஊ.சே. நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு அவா்களை இயலுமைப்படுத்தும் விதத்தில் நேரடி பற்றுக் கொடுப்பனவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் ஊ.சே.நிதியத்திற்கு மின்னஞ்சலூடாக பங்களிப்பு தொடா்பான விபரங்களை நேரடியாக அனுப்புவதும் தொடா்ந்து இடம்பெறுகின்றன.

தொழில்தருநா்கள் அவா்களது மாதாந்தப் பங்களிப்பினை அவா்களது வங்கியிலிருந்து ஊ.சே. நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு நேரடிப் பற்றுக் கொடுப்பனவு முறைமை அவா்களை இயலுமைப்படுத்திய வேளையில், திணைக்களத்திற்கு மின்னஞ்சலூடாக பங்களிப்பு விபரங்களை நேரடியாக அனுப்புவதும் தொடா்ந்தது.

2014 இறுதியில் இ-கூற்று முறைமையின் கீழ், 3,706 தொழில்தருநா்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனா். இவ்வசதியானது தற்பொழுது மொத்த 2.4 மில்லியன் செயற்படும் உறுப்பினா்களில் ஏறத்தாழ 44 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தமையால் ஊழியா்களின் கணக்குகளை உடனடியாகவும் துல்லியமாகவும் இற்றைப்படுத்துவதற்கு ஊ.சே. நிதியத்தினால் இயன்றது.

ஊ.சே. நிதியத் திணைக்களம் இ-கூற்றுகளைச் சமா்ப்பிப்பது தொடா்பில் தொழில்தருநா்களுக்கும் தொழில் திணைக்கள அலுவலகங்களுக்குமென 27 விழிப்புணா்வுப் பிரச்சாரங்களையும் செயலமா்வுகளையும் நடத்தியது. இதன் பெறுபேறாக, இ-கூற்று முறைமையுடன் பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநா்களின் எண்ணிக்கை 2013இன் இறுதியில் 1,868 இலிருந்து 2014 இறுதியில் 3.706 இற்கு ஏறத்தாழ 50 சதவீதத்தினால் அதிகரித்தது.

## 2.11 பிம்பப்படுத்துகின்ற ஸ்கான் பிரதிகள் செயற்றிட்டம்

திணைக்களத்தில் ஏறத்தாழ காகிதாகதிகளற்ற தொழிற்பாட்டு முறையொன்றினை நிறுவுவதன் மூலம் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் பிம்பப்படுத்தல் ஸ்கானிங் செயற்றிட்டமொன்று நடைமுறைக்கிடப்பட்டது.

செயற்றிட்டத்தின் நான்கு முக்கிய கட்டங்களாவன,

(i) தற்போதுள்ள ஆவணங்களை இலத்திரனியல் வடிவத்திற்கு மாற்றுதல்

(ii) ஆவணங்களை தற்காலத்தில் ஸ்கான் செய்தல்

(iii) இ-பதிவேட்டு அறையினை நிறுவுதல்

(iv) தற்போதுள்ள ஊ.சே. நிதியம் கணனி முறைமைகளுடன் ஆவண முகாமைத்துவ முறைமையினை இணைத்தல்

2014ஆம் ஆண்டு இறுதியில், 2012ஆம் ஆண்டு வரையான முதன்மைக் கோவைகளின் 90 சதவீதம், ஆா்ஆா்1 படிவத்தின் 100 சதவீதமும் ஆா்ஆா்6 படிவத்தின் 90 சதவீதமும் படிவம் டி இன் 100 சதவீதமும் நிறைவடைந்திருக்கின்றன.

இவ்வாண்டுப் பகுதியில், ஸ்கான் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் தொடா்பான தரவுத் தளங்கள் பற்றி கணக்காய்வு செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட விலைக்கோரல் நடவடிக்கைகளினூடாக பணி வழங்குநரொருவா் (KPMG) தெரிவு செய்யப்பட்டாா். முதன்மைக் கோப்புக்களில் 40 சதவீதமான கணக்காய்வுகள் ஆண்டின் இறுதியில் பூா்த்திசெய்யப்பட்டுள்ளன.

இ-பதிவேட்டு அறையினை நிறுவுவது தொடா்பில் அனைத்துத் தேவையான வன்பொருட்களின் கொள்வனவும் பூா்த்தியானவுடன் இ-பதிவேட்டு அறை தீா்வினை அணுகுவது (ஐபீஎம் கோப்பு வலை) ஒழுங்குசெய்யப்பட்டதுடன் முதன்மைக் கோப்புக்களில் 80 சதவீதமான பிம்பப்படுத்தல்கள் ஏற்புடைய பயன்படுத்துநா்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன. இதன் விளைவாக, பதிவேடுகள் திருத்தப் பிரிவின் உறுப்பினா் விபரம் திருத்தும் தொழிற்பாடு லொயிட்ஸ் கட்டடத்திற்கு வெற்றிகரமாகக் கொண்டு செல்லப்பட்டது. பயன்படுத்துநா்களுக்கும் ஐபீஎம் கோப்பு வலையமைப்பு தொடா்பில் பயிற்சி வழங்கப்பட்டது.

தற்கால அடிப்படையில் ஆவணங்களை ஸ்கானிங் செய்து கொள்வதற்கான முறைமை மற்றும் வழமையான தொழிற்பாடுகளில் காகிதாதிகளின் ஈடுபாட்டினைக் குறைத்தல் என்பனவற்றிற்கான தேவைப்பாட்டு விபர அறிக்கையானது சிறப்பு ஆய்வொன்றினையும் ஏற்கனவேயுள்ள தொழிற்பாட்டு முறைமை மற்றும் பயன்படுத்துநா்களின் தேவைப்பாடு என்பன தொடா்பான விபரமான பகுப்பாய்வுகளை மேற்கொண்டதன் பின்னா் வரையப்பட்டது. இது தொடா்பில், ஏற்புடைய பயன்படுத்துநா்கள், முகாமைத்துவக் குழு மற்றும் பணி வழங்குவோரின் பங்கேற்புடன் தொடா்ச்சியான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அறிக்கையினை பூா்த்திசெய்வதற்கும் முகாமைத்துவத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கும் முன்னதாக பல விளக்கவுரைகளும் செயன்முறை விளக்கங்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஏஎஸ்400 முறைமைக்குள் ஆவண முகாமைத்துவ முறைமையினை ஒருங்கிணைப்பது 2015இன் முதற்காலாண்டுப் பகுதியின் இறுதியில் ஆரம்பமாகும்

## 2.12 பொதுமக்கள் விழிப்புணர்வு

முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட ஏறத்தாழ காகிதாதிகளற்ற சூழலொன்றை நோக்கி நகர்வதற்கான வசதியை வழங்க ஆர்வலர்களிடையே ஊ.சே. நிதியத் தொழிற்பாடுகள் மீதான மேம்பட்ட விழிப்புணர்வினை வளர்ப்பது முக்கியமான விடயமாக உள்ளது.

ஊ.சே. நிதியப் பணிகள் பற்றி உறுப்பினர்களினதும் ஏனைய பங்குடமையாளர்களினதும் விழிப்புணர்வினை வளர்த்தல் நடமாடும் பணிகள், வீடமைப்புக் கடன்களின் முகாமைத்துவம் தொடர்பில் வங்கி அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், தேசிய மட்டத்திலான கம்பனி நிகழ்வுகளிலும் பொருட்காட்சிகளிலும் பங்கேற்றல் மற்றும் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், வீடியோ நிகழ்ச்சி மற்றும் காட்சி விளக்கங்கள் போன்ற இணைந்த கலப்பு தொடர்பாடல் ஊடகங்களைப் பயன்படுத்தல் என்பனவற்றினூடாக மேற் கொள்ளப்பட்டது.

2014ஆம் ஆண்டுப் பகுதியில் பெல்மதுளை தோட்டம், ஹுனுவெல்ல தோட்டம், நில்கென தோட்டம், பொறுனுவ தோட்டம், ஒபத்தா தோட்டம், வெல்லதுற தோட்டம், கவூப் தோட்டம் மற்றும் ஆனந்தா தோட்டம் என்பனவற்றைக் கொண்ட காபத்தை பிளாண்டேஷன் பிஎல்சி தோட்டங்களை உள்ளடக்கி நான்கு நடமாடும் பணிகள் நடத்தப்பட்டதுடன் இரண்டு நடமாடும் பணிகள் சிங்கள மகா வித்தியாலயம் - திருகோணமலையிலும் அதற்குச் சமாந்தரமாக சிறிஜெயவர்த்தனபுர அரிமா சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பல்நோக்கு பணிகள் பாசறையிலும் மொரட்டுவவில் மருத்துவ மற்றும் சனசமூக உபசரணை நிலையத்திலும் நடத்தப்பட்டன.

நடமாடும் பணிகள் தொழில் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் ஏற்புடைய மாவட்ட/ பிரதேச செயலகங்கள் போன்ற ஏனைய அரச அமைப்புக்களின் ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளப்பட்டன. நடமாடும் பணிகளில் ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் பின்வரும் பணிகள் வழங்கப்பட்டன.

(i) ஊ.சே.நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல்

(ii) ஊ.சே.நிதிய உறுப்பினர் விபரங்களையும் கணக்குகளையும் திருத்துதல்

(iii) உறுப்பினர் விபரங்களை மீளப் பதிவுசெய்தல்

(iv) கணனி வழி உறுப்பினர் பணிகளை ஊக்குவித்தல் அதாவது குறுந்தகவல் இணையத்தள விசாரணை வசதிகளை மேம்படுத்துதல்

(v) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டைகளையும் அதற்குரிய பணிகளையும் வழங்குதல்

(vi) பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் பிறப்புச் சான்றிதழ்கள்/ வயது ஊகச் சான்றிதழ்கள்/ செல்லுபடியற்ற அறிக்கைகள் மற்றும் அது தொடர்பான பணிகளையும் வழங்குதல்

(vii) ஊ.சே.நிதியத்தின் பொதுவான நடைமுறைகள் மீது ஆலோசனைகளை வழங்குதல்

நடமாடும் பணிகளின் பயனுறுதன்மையினை அதிகரிக்கும் நோக்குடன் ஒவ்வொரு நடமாடும் பணிக்கும் முன்னதாக தொடர்பான தொழில்தருநர்கள், முகாமையாளர்கள் மற்றும் தொடர்பான தொழில்தருநர்களின் ஏனைய நிருவாக அலுவலக உறுப்பினர் ஆகியோருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

திணைக்களம் 03 தேசிய மட்டத்திலான பொருட்காட்சிகளிலும் கம்பனி நிகழ்வுகளிலும் பங்கேற்றது. குளியாப்பிட்டியில் நடைபெற்ற தயட்ட கிருள பொருட்காட்சி - 2014, இலங்கை ஆளணி முகாமைத்துவ நிறுவகத்தினால் நடத்தப்பட்ட தேசிய மனிதவளப் பணிகள் வழங்குவோர் பொருட்காட்சி - 2014 மற்றும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் நிறுவகத்தினால் நடத்தப்பட்ட கைத்தொழில் பொருட்காட்சி மற்றும் வர்த்தகச் சந்தை - 2014 ஆகியவற்றில் கலந்து கொண்டது.

கொழும்பில் அமைந்துள்ள ஊ.சே.நிதிய அலுவலகத்திற்கு வருகைதருவோரில் பெரும் பகுதியினர் பெருந்தோட்டத் துறையிலிருந்தே வருவதனால் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் முக்கியமாக பெருந்தோட்டத் துறை அமைப்புக்களைக் கவனத்தில் கொண்டே நடத்தப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் பணியினைப் பெற்றுக் கொண்ட ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 12,000 இற்கும் அதிகமானதாகும்.

# ஊழியர் சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான
# வருமான செலவினக் கூற்று

(ரூபா)

| | | 2014 | | | 2013 |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | மொத்தம் | |
| வட்டி வருமானம் | 1 | 127,498,533,652 | - | 127,498,533,652 | 105,038,261,311 |
| பங்கிலாப வருமானம் | 2 | 3,321,376,704 | - | 3,321,376,704 | 3,226,229,672 |
| பெறப்பட்ட மூலதன இலாபம்/(இழப்பு) | 3 | 6,359,387,362 | - | 6,359,387,362 | 1,127,566,932 |
| பதிவழிப்பு இலாபம் | 4 | 25,896,727,258 | - | 25,896,727,258 | 26,955,778,791 |
| இலாபம்/ (இழப்பு) ஊடாக சந்தைப் பெறுமதியிலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (இழப்பு) | 5 | 89,378,474 | - | 89,378,474 | (44,504,112) |
| **முதலீட்டு வருமானம்** | | **163,165,403,450** | **-** | **163,165,403,450** | **136,303,332,594** |
| ஏனைய வருமானம் | 6 | 682,116,092 | 25,977,713 | 708,093,805 | 354,002,140 |
| **முழு மொத்த வருமானம்** | | **163,847,519,542** | **25,977,713** | **163,873,497,255** | **136,657,334,734** |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம்** | 7 | (620,579,484) | (422,315,195) | (1,042,894,679) | (978,925,750) |
| வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | | **163,226,940,058** | **(396,337,482)** | **162,830,602,576** | **135,678,408,984** |
| கழிக்குக: வருமான வரி | 8 | (12,168,692,888) | - | (12,168,692,888) | (10,068,532,367) |
| **ஆண்டுக்கான தொழிற்படு இலாபம்** | | **151,058,247,170** | **(396,337,482)** | **150,661,909,688** | **125,609,876,617** |
| கூட்டுக: முன்னைய ஆண்டிலிருந்தான பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | | | | 140,731,641 | 28,010,746 |
| கூட்டுக: முன்னைய ஆண்டுச் சீராக்கம் | | | | | 28,254,317 |
| **பகிர்ந்தளிப்புக்காக உள்ள இலாபம்** | | | | **150,802,641,329** | **125,666,141,680** |
| கழிக்குக: மீளளிப்புக்கள் தொடர்பில் செலுத்தப்பட்ட வட்டி - நடப்பாண்டு | | | | (3,200,660,092) | (2,233,490,165) |
| கழிக்குக: பங்கிலாபக் கொடுப்பனவுகளுக்கான ஏற்பாடு | | | | (6,000,000,000) | - |
| கூட்டுக/(கழிக்குக): இலாபச் சமப்படுத்தல் ஒதுக்கங்களிலிருந்தான/ (இற்கான) மாற்றல்கள் | | | | (4,000,000,000) | 3,700,000,000 |
| 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி - 10.50% (2013 - 11%) | | | | (137,290,684,408) | (126,991,919,874) |
| **அடுத்த ஆண்டிற்காக முன்கொண்டு செல்லப்படும் நிலுவை** | | | | **311,296,829** | **140,731,641** |

பக்கங்கள் 108 இலிருந்து 136 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதியாகும்.

அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஆர். ஏ. ஏ. ஜயலத்
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2015 பெப்புருவரி 23

# ஊழியர் சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

(ரூபா.)

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| ஆண்டிற்கான இலாபம் | | 150,661,909,688 | 125,609,876,617 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | |
| விற்பனைக்குள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | 9 | 19,179,390,857 | 1,805,741,814 |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | **169,841,300,544** | **127,415,618,430** |

நாணயச் சபையின் சார்பில்

அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஆர். ஏ. ஏ. ஜயலத்
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2015 பெப்புருவரி 23

# ஊழியர் சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான
# நிதியியல் நிலைமைக் கூற்று

(ரூபா.)

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (தே.ஏ.பெ) | 10 | **246,198,200** | **229,740,242** |
| தொழிற்பாட்டிலுள்ள மூலதனம் | 11 | **1,890,547,335** | **890,547,335** |
| அருவச் சொத்துக்கள் | 12 | **4,485,248** | **8,223,942** |
| நிதியியல் சொத்துக்கள் | 13 | | |
| திறைசேரி முறிகள் | | 1,286,593,392,598 | 1,126,941,275,632 |
| ரூபாக் கடன் | | 23,100,000,000 | 23,100,000,000 |
| திறைசேரி உண்டியல்கள் | | 940,477,000 | 13,587,399,142 |
| பட்டியலிடப்பட்ட உரிமை மூலதனம் | | 85,812,859,172 | 63,263,646,500 |
| பட்டியலிடப்படாத உரிமை மூலதனம் | | 10,770,624,995 | 9,480,625,000 |
| கம்பனித் தொகுதிக்கடன்கள் | | 18,342,852,898 | 11,106,379,600 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | | 2,988,483,197 | 3,220,789,626 |
| வர்த்தகப் பத்திரங்கள் | | 1,000,000,000 | - |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | | 8,134,000,000 | 6,627,000,000 |
| | | **1,437,682,689,860** | **1,257,327,115,500** |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| இருப்புக்கள் | | 25,074,208 | 18,065,752 |
| பெறவேண்டிய வட்டி | | 44,186,163,734 | 34,375,440,761 |
| பெறவேண்டிய பங்களிப்புக்கள் | | 7,939,417,154 | 7,264,552,149 |
| ஏனைய பெறவேண்டிய மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் | 14 | 1,295,244,086 | 1,521,042,677 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் | 15 | 2,612,773,329 | 2,408,928,759 |
| | | **56,058,672,511** | **45,588,030,098** |
| கழிக்குக: நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| கடன் கொடுநர் | 16 | 2,619,399 | 5,723,796 |
| செலுத்த வேண்டிய செலவினங்கள் | | 163,507,908 | 150,338,731 |
| கொடுபடத்தக்க பங்கிலாபங்கள் | | 6,000,000,000 | - |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 17 | 2,785,070,670 | 3,913,575,001 |
| | | **(8,951,197,977)** | **(4,069,637,528)** |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | | **47,107,474,534** | **41,518,392,570** |
| மொத்தத் தேறிய சொத்துக்கள் | | **1,486,931,395,177** | **1,299,974,019,589** |
| காட்டப்பட்டவை | | | |
| உறுப்பினர் நிலுவைகள் | 18 | 1,445,462,269,108 | 1,281,854,849,565 |
| | | **1,445,462,269,108** | **1,281,854,849,565** |
| ஒதுக்கங்கள் | 19 | 41,157,829,240 | 17,978,438,383 |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | | 311,296,829 | 140,731,641 |
| | | 41,469,126,069 | 18,119,170,024 |
| நிதியத்தின் மொத்தத் தேறிய பெறுமதி | | **1,486,931,395,177** | **1,299,974,019,589** |

பக்கங்கள் 108 இலிருந்து 136 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதியாகும்.

அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஆர். ஏ. ஏ. ஜயலத்
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2015 பெப்புருவரி 23

# ஊழியர் சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்குகள்

(ரூபா)

| | குறிப்பு | 2014 | | | 2013 |
|---|---|---|---|---|---|
| | | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | மொத்தம் | |
| வருடத்தின் ஆரம்பக் காசுமீதி | | 2,408,928,759 | 103,799,643 | 2,512,728,402 | 2,422,124,625 |
| | | | | | |
| கூட்டுக: மொத்தப் பெறுகைகள் | 20 | 229,428,229,078 | 2,063,070,780 | 231,491,299,858 | 230,036,096,740 |
| | | | | | |
| கழிக்குக: மொத்தக் கொடுப்பனவுகள் | 21 | 229,224,384,508 | 2,160,931,189 | 231,385,315,697 | 229,945,492,963 |
| | | | | | |
| **வருடத்தின் இறுதிக் காசு மீதி** | | **2,612,773,329** | **5,939,234** | **2,618,712,563** | **2,512,728,402** |

நாணயச் சபைச் சார்பில்

அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஆர். ஏ. ஏ. ஜயலத்
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2015 பெப்புருவரி 23

# ஊழியர் சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான முதலீடுகளின் கூற்று

(ரூபா)

| 2014 | | | | | முதலீடுகளின் வகை | குறிப்பு | 2013 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முகப்புப் பெறுமதி | கிரயம் | பதிவழிக்கப்பட்ட பெறுமதி | சந்தைப் பெறுமதி | ஏட்டுப் பெறுமதி | | | முகப்புப் பெறுமதி | கிரயம் | பதிவழிக்கப்பட்ட பெறுமதி | சந்தைப் பெறுமதி | ஏட்டுப் பெறுமதி |
| 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | ரூபாக் கடன் | 24 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 |
| 1,450,144,478,200 | 1,250,464,971,395 | 1,285,938,917,126 | 1,521,503,976,973 | 1,286,593,392,598 | திறைசேரி முறிகள் | 23, 24 | 1,356,388,637,000 | 1,097,409,813,289 | 1,126,126,980,931 | 1,190,953,799,549 | 1,126,941,275,632 |
| 1,000,000,000 | 943,574,000 | 943,574,000 | 940,477,000 | 940,477,000 | திறைசேரி உண்டியல் | 23 | 13,968,793,000 | 12,575,597,836 | 12,575,597,836 | 13,587,399,142 | 13,587,399,142 |
| 18,211,649,500 | 18,211,852,900 | 18,342,852,898 | 18,342,852,898 | 18,342,852,898 | தொகுதிக் கடன்கள் | 22, 23, 24 | 11,106,379,600 | 11,106,379,600 | 11,106,379,600 | 11,106,379,600 | 11,106,379,600 |
| 3,417,481,558 | 2,414,218,102 | 2,988,483,197 | 2,988,483,197 | 2,988,483,197 | நம்பிக்கைச் சான்றிதழ்கள் | 24 | 3,774,661,584 | 2,759,800,000 | 3,220,789,626 | 3,220,789,626 | 3,220,789,626 |
| - | 74,012,464,056 | 74,012,464,056 | 85,812,859,172 | 85,812,859,172 | பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் | 22, 23 | - | 71,690,881,118 | 71,690,881,118 | 63,277,367,343 | 63,263,646,500 |
| - | 10,770,624,995 | 10,770,624,995 | 10,770,624,995 | 10,770,624,995 | பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் | 23 | - | 9,480,625,000 | 9,480,625,000 | 9,480,625,000 | 9,480,625,000 |
| 1,082,045,184 | 1,000,000,000 | 1,000,000,000 | 1,000,000,000 | 1,000,000,000 | வர்த்தகப் பத்திரங்கள் | 24 | - | - | - | - | - |
| 8,134,000,000 | 8,134,000,000 | 8,134,000,000 | 8,134,000,000 | 8,134,000,000 | நேர்மாற்று மீள்கொள்வனவு | 25 | 6,627,000,000 | 6,627,000,000 | 6,627,000,000 | 6,627,000,000 | 6,627,000,000 |
| **1,505,089,654,442** | **1,389,051,705,448** | **1,425,230,916,272** | **1,672,593,274,235** | **1,437,682,689,860** | மொத்தம் | | **1,414,965,471,184** | **1,234,750,096,844** | **1,263,928,254,111** | **1,321,353,360,260** | **1,257,327,115,500** |

நாணயச் சபை சார்பாக

அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஆர். ஏ. ஏ. ஜயலத்
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2015 பெப்புருவரி 23

## ஊழியர் சேமலாப நிதியம்
## 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குரிமை மூலதனத்தில்/ உறுப்பினர் உரிமை மூலதனத்தில்/உறுப்பினர் நிதி மாற்றங்களின் கூற்று

(ரூபா.)

| விபரம் | உறுப்பினர் நிலுவை | கட்டட ஒதுக்க நிதி | தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்க நிதி | இலாப சமப்படுத்தல் ஒதுக்க நிதி | பொது ஒதுக்க நிதி | முதலீட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்து வைக்கப்பட்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2012 திசெம்பர் 314இல் உள்ளவாறான நிலுவை | **1,124,508,128,334** | **3,157,000,000** | **350,000,000** | **17,800,000,000** | **6,650,000,000** | **(8,084,303,432)** | **28,010,746** | **1,144,408,835,648** |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | - | - | - | - | - | 28,254,317 | **28,254,317** |
| விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | - | - | - | - | - | 1,805,741,814 | - | **1,805,741,814** |
| 2013ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | 125,609,876,617 | **125,609,876,617** |
| 2013ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்புக்கள் | 30,354,801,358 | - | - | - | - | - | - | **30,354,801,358** |
| 2013இல் மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி | - | - | - | - | - | - | (2,233,490,165) | **(2,233,490,165)** |
| **உறுப்பினர் வட்டி (2013:11.00%)** | 126,991,919,874 | - | - | - | - | - | (126,991,919,874) | - |
| இலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள் | - | - | - | (3,700,000,000) | - | - | 3,700,000,000 | - |
| 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **1,281,854,849,565** | **3,157,000,000** | **350,000,000** | **14,100,000,000** | **6,650,000,000** | **(6,278,561,617)** | **140,731,641** | **1,299,974,019,589** |
| விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | - | - | - | - | - | 19,179,390,857 | - | **19,179,390,857** |
| 2014ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | | 150,661,909,688 | **150,661,909,688** |
| 2014ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்புக்கள் | 26,316,735,134 | - | - | - | - | - | - | **26,316,735,134** |
| மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி - 2014 | - | - | - | - | - | - | (3,200,660,092) | **(3,200,660,092)** |
| செலுத்தப்படவேண்டிய உறுப்பினர் வட்டி (2014:10.50%) | 137,290,684,408 | - | - | - | - | - | (137,290,684,408) | |
| கொடுக்கப்பட வேண்டிய பங்கிலாபம் | | | | | | | (6,000,000,000) | **(6,000,000,000)** |
| இலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிற்கான மாற்றல்கள் | - | - | - | 4,000,000,000 | - | - | (4,000,000,000) | - |
| 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **1,445,462,269,108** | **3,157,000,000** | **350,000,000** | **18,100,000,000** | **6,650,000,000** | **12,900,829,240** | **311,296,829** | **1,486,931,395,177** |

நாணயச் சபை சார்பாக

அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஆர். ஏ. ஏ. ஜயலத்
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2015 பெப்புருவரி 23

# ஊழிய சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்வுக் கூற்று

(ரூபா.)

| விபரம் | 2014 | 2013 |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்வு | | |
| முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி | 128,996,267,061 | 98,698,057,389 |
| பங்குகளிலிருந்தான பங்கிலாபம் | 3,200,734,432 | 2,886,142,528 |
| தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானம் | 697,734,222 | 346,252,668 |
| கடன்பெற்றோரிடமிருந்து மீளப்பெற்றவை | 11,333,673 | 2,469,221 |
| தொழிற்படு செலவினம் | (885,954,089) | (828,410,501) |
| முற்பணங்கள் | (497,528) | (31,625,921) |
| கடன் வழங்குநர்களுக்கான தீர்வுகள்/ கொடுப்பனவுகள் | (2,499,386,111) | (2,396,466,159) |
| தொழிற்பாடுகளிலிருந்தது உருவாக்கப்பட்ட காசு | **129,520,231,659** | **98,676,419,226** |
| செலுத்தப்பட்ட வரி | (23,775,366,641) | (31,030,731,549) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | **105,744,865,019** | **67,645,687,677** |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்வு | | |
| முதலீடுகள் | (622,205,148,638) | (763,359,631,755) |
| முதலீடுகளின் முதிர்ச்சி | 422,647,605,171 | 619,419,455,910 |
| தி/ உண்டியல், முறிகள் மற்றும் பங்குகளின் விற்பனையிலிருந்தான வருவாய்கள் | 70,226,870,934 | 46,925,727,535 |
| முதலீடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு | (129,330,672,533) | (97,014,448,310) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (59,214,474) | (119,936,511) |
| செயற்பாட்டிலுள்ள மூலதனம் | **(997,515,857)** | **(448,000,000)** |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | **(130,387,402,864)** | **(97,582,384,822)** |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்வு | | |
| பங்களிப்புகள் | 90,048,935,714 | 80,176,396,756 |
| பொது வைப்புக்கள் | (78,395,878) | 139,298,344 |
| மீளளிப்புக்கள் | (65,118,218,187) | (50,243,482,439) |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | **24,852,321,649** | **30,072,212,662** |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிலான தேறிய (குறைவு)/அதிகரிப்பு | **209,783,804** | **135,515,517** |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | **2,408,928,759** | **2,377,212,886** |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் - சீராக்கலின் முன் | **2,618,712,563** | **2,512,728,403** |
| சீராக்கம்: ஆண்டின் இறுதியிலுள்ள காசு மீதி - தொழில் திணைக்களம் | **(5,939,234)** | **(103,799,642)** |
| ஆண்டின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமமானவையும் | **2,612,773,329** | **2,408,928,759** |

நாணயச் சபை சார்பாக

அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஆர். ஏ. ஏ. ஜயலத்
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி: 2015 பெப்புருவரி 23

# ஊழியர் சேமலாப நிதியம் கணக்கீட்டுக் கொள்கை

## 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் சட்ட ரீதியான அடிப்படை

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேம நிதியம் (ஊ.சே. நிதியம் அல்லது நிதியம்) என்பது இலங்கையிலுள்ள கம்பனி மற்றும் வர்த்தகத் துறையிலுள்ள ஊழியர்களுக்கான கட்டாய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாகும். நிதியத்தின் பொதுவான நிருவாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற ரீதியில் மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் அதன் பொறுப்பாண்மை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் 5(1)(எச்) மற்றும் (ஐ) என்பனவற்றின் நியதிகளுக்கிணங்க நாணயச் சபை, நிதியம் தொடர்பான பொதுவான கணக்குகளைப் பேணி பின்வரும் நிதியியல் கூற்றுக்களை வருடாந்தம் தயாரிக்க வேண்டியுள்ளது.

அ. வருமானம் மற்றும் செலவுக் கூற்று

ஆ. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கூற்று

இ. பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளின் கூற்று; அத்துடன்

ஈ. ஒவ்வொரு வகை முதலீடுகளினதும் முகப்புப் பெறுமதி, கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதிகளைக் காட்டுகின்ற முதலீடுகளின் கூற்று

## 2. கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 தயாரிப்பின் அடிப்படை

இலாபம் மற்றும் இழப்பு மற்றும் விற்பனைக்குள்ள என்பனவற்றினூடான சந்தைப் பெறுமதியில் குறித்துரைக் கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் நீங்கலாக, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்று ரீதியிலான செலவுகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.

### 2.2 இணங்குவிப்புக் கூற்று

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் கூற்றுக்கள் கூட்டிணைக்கப்பட்டுள்ள நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கணக்கீட்டுத் தத்துவங்களுக்கும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் உருவாக்கப்பட்டுள்ள புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்/ இலங்கை கணக்கீட்டு நியமம் என்பன பொருண்மிய ரீதியில் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் சபையினால் விடுக்கப்பட்டவாறான பன்னாட்டு அறிக்கையிடல் நியமங்களுடன் ஒத்தவைகளாகக் காணப்படுகின்றன.

### 2.3 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

2012 சனவரி 1ஆம் திகதியிலிருந்து இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் என்பன நடைமுறைக்கு வந்தமையின் காரணமாக, குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், முறைகள் மற்றும் சமர்ப்பிப்புக்கள் மாற்றமடைந்துள்ளன அல்லது மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்கள் தவிர, தற்போதைய இலங்கை கணக்கீட்டு நியமங்களில் பிரதிபலிக்கப்பட்ட திருத்தங்கள் நீங்கலாக, பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்டவையோடு ஒத்தனவாகக் காணப்பட்டன.

### 2.4 மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் பயன்பாடு

நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, மதிப்பீடுகளின் பயன்பாட்டினையும் எதிர்கால நிலைமைகள் பற்றிய எடுகோள்களையும் அவசியப்படுத்துகிறது. கிடைக்கத்தக்க தகவல்களின் பயன்பாடும் கருத்துக்களின் பிரயோகங்களும் மதிப்பீடுகளின் உருவாக்கத்தில் இயல்பாகவே இணைந்து காணப்படுவதால் எதிர்காலத்தில் உண்மையான பெறுபேறுகள் நிதியியல் தகவல்கள், தயாரிக்கப்படுகின்ற மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடக்கூடும். கருத்துக்கள் அத்தியாவசியமாக பிரயோகிக்கப்படுகின்ற குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் நிதியியல் சாதனங்களின் மதிப்பீடு, சொத்துக்களின் பெறுமதி இழப்பு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் தேய்மானம், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகள் என்பனவற்றோடு தொடர்புடையனவாகக் காணப்பட்டன.

### 2.5 தொடர்ச்சியான நிலைப்பாடு

ஊகிக்கக்கூடிய எதிர்காலத்துக்குத் தேவையான சொத்துகள் நிதியத்திடம் காணப்படுவதால், தொடர்ச்சியான நிலைப்பாடு தொடர்பில் திருப்தியடைந்துள்ளது. அதனால் நிதிக் கூற்று வெளியீடுகள் தொடர்ச்சியான நிலைப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.6 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழ்ந்த அனைத்துப் போதுமானளவு சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. அறியக் கிடைத்துள்ள பொறுப்புக்களுக்கும் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

## 3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1 நிதியியல் சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டுக்கான அடிப்படையும்

#### 3.1.1 நிதியியல் சொத்துக்களை அங்கீகரித்தலும் அளவிடுதலும்

நிதியியல் சாதனமொன்றின் ஒப்பந்த ரீதியான ஏற்பாட்டின் ஒரு தரப்பாக நிதியம் மாறும் போது மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. நிதியியல் சொத்துக்கள் முக்கியமாக முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள், இலாபம் மற்றும் இழப்பினூ டான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள், கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பத்தில் செலவில் அங்கீகரிக்கப்பட்டு, குறித்த பரிசீலனையில் கொள்ளப்பட்ட சந்தைப் பெறுமதியையுடையதாக, அத்துடன், இலாபம்

அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதியில் நிதியியல் சொத்துக்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்த கையேற்பு உட்பட கொடுக்கல்வாங்கல் செலவுகளுடன் நேரடியாகச் சேர்க்கப்பட்டதாக இருக்கின்றன.

நிதியியல் சொத்துக்களின் பகுப்பாய்வுகளும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின் அடிப்படையும் பின்வருமாறு:

(அ) முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது நிர்ணயிக்கப்படத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய நிதியியல் சொத்துக்கள் மற்றும் ஊ.சே. நிதியம் எதிர்பார்க்கும் நிலையான முதிர்ச்சியும், முதிர்ச்சி வரை வைத்திருக்கக் கூடியவையும் முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் பின்னர் ஏதேனும் பெறுமதி இழப்புக்கள் இருப்பின் அதனைக் கழித்து பயனுறு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகளைக் கொள்வனவு செய்வதன் மீது ஏற்படுகின்ற கட்டணங்கள் மற்றும் கழிவிடல்கள் அவற்றின் பயனுறு வட்டி வீதங்களின் கணிப்பில் உள்ளடக்கப்படுகின்றன. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் நீக்கப்படும் போது அல்லது பெறுமதி இழக்கும் போது இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) இலாபம் அல்லது இழப்பு ஊடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள்

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துக்கள் இலாபங்கள் அல்லது இழப்புக்களூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்களின் வகைக்குள்ளும் இலாபம் அல்லது இழப்பூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் என ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்குள்ளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குரிய கொடுக்கல்வாங்கல் செலவுகள் வருமானக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது இழப்பூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் பின்னர், சந்தைப் பெறுமதிகளினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டன. சந்தைப் பெறுமதியின் மாற்றங்கள் பிணையங்களின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பாக அல்லது வீழ்ச்சியாக அங்கீகரிக்கப்படுகின்ற போது தோன்றுகின்ற தேறிய இலாபங்கள் மற்றும் இழப்புக்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

(இ) கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்

தீவிரமான சந்தை நடவடிக்கைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்படாத ஊ.சே. நிதியத்தினால் பெறப்பட்ட நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகள் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பின்னர் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் ஏதேனும் பெறுமதியிழத்தல் இழப்புக்களைக் கழித்து பயனுறு வட்டி வீத மாதிரியினைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் நீக்கப்படும் போது அல்லது பெறுமதி இழக்கும் பொழுது இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஈ) விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்கள்

இலாபம் அல்லது இழப்புக்களினூடாக சந்தைப் பெறுமதியிலுள்ள பிணையங்களாக வகைப்படுத்தப்படாத பங்குரிமைச் சாதனங்கள் மற்றும் மேலேயுள்ள மூன்று வகைகளின் கீழும் வகைப்படுத்தப்படாத படுகடன் சாதனங்களும் ஆரம்ப கையேற்பில் விற்பனைக்குக் கிடைக்கத்தக்க முதலீடுகள் என குறித்துரைக்கப்பட்ட பிணையங்களும் விற்பனைக்குள்ளவைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றிலுள்ள சந்தைப் பெறுமதியில் தொடர்ந்தும் மதிப்பிடப்படுகின்றன. விற்பனைக்குள்ள சொத்துக்கள் விற்கப்படும் வரை அல்லது பெறுமதி இழக்கும் வரை விற்பனைக்குள்ள சொத்துக்கள் மீதான சந்தைப் பெறுமதி மாற்றங்கள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் மீள்மதிப்பீட்டு ஒதுக்குகளூடாக உறுப்பினர் நிதியின் கீழ் ஒன்று சேர்க்கப்படுகின்றன.

விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்கள் பெறுமதியிழக்குமிடத்து, நிதிச் சொத்துக்களில் கொண்டிருக்கும் செலவிற்கும் நடைமுறைச் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பயனுறு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி விற்பனைக்குள்ள படுகடன் பிணையங்கள் மீது வட்டி வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. கொடுப்பனவுகளை பெறுவதற்கான உரிமை நிலைநாட்டப்படும்போது பங்கிலாபங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.1.2 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும், நிதியியல் சொத்துக்களின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க பெறுமதி இழப்புக்கள் ஏதேனும் ஏற்பட்டுள்ளனவா என்பதனைக் கண்டறிவதற்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெறுமதியிழப்புக்களின் மூலம் இழப்புக்கள் அங்கீகரிக்கப்படுமிடத்து, நிதியியல் சொத்தின் (இழப்பு நிகழ்வு) ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் ஏற்பட்ட ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான நிகழ்வுகளின் விளைவாக பெறுமதி இழப்புக்களுக்கான சான்றுகள் காணப்படுவதுடன் அவ்விழப்பு நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நம்பகரமான முறையில் மதிப்பிடத்தக்க நிதியியல் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்கின்றது.

பிணையங்களின் பெறுமதி இழப்புக்கள் பற்றிய குறிப்பிடத்தக்க சான்றுகள் வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடுகள் போன்ற வழங்குநர் பற்றிய குறித்துரைக்கப்பட்ட தகவல்கள், முறிவடைதல், வங்கி முறிவு அல்லது ஏனைய நிதியியல் இடர்ப்பாடுகள் போன்ற ஒப்பந்தங்களை மீறுதல் போன்றவற்றை மட்டுமல்லாது பிணையங்களின் செலவுகளை மீளப்பெற முடியாது என்பதற்கு சான்றுகளை வழங்குகின்ற சந்தை நிலைமைகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பற்றிய தகவல்களையும் உள்ளடக்கலாம். சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அதன் செலவிற்கும் குறைவாக குறிப்பிடத்தக்களவில் அல்லது நீண்ட காலத்திற்கு வீழ்ச்சியடைதல் பெறுமதி இழப்பிற்கான குறிப்பிடத்தக்க சான்றாக விளங்குகின்றது. இது குறிப்பிடத்தக்கதொன்றா என்பதை மதிப்பிடுகையில், சந்தைப் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சி, ஆரம்ப அங்கீகரிப்பில் சொத்துக்களின் ஆரம்ப செலவிற்கெதிராக மதிப்பிடப்படுகிறது. இது நீண்ட காலமாக இருக்கின்றதா என்பதனை மதிப்பிடுகையில்,

வீழ்ச்சி, சொத்தின் சந்தைப் பெறுமதி ஆரம்ப அங்கீகரிப்பின் போதான அதன் ஆரம்பச் செலவிற்கும் கீழாக வீழ்ச்சியடைந்த காலப்பகுதிக்கெதிராக மதிப்பிடப்படுகிறது.

3.1.3 அங்கீகரிக்கப்படாத நிதியியல் சொத்துக்கள்

சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்வுகளைப் பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமை கலாவதி யாகியிருக்கும் பொழுது அல்லது நிதியியல் சொத்துக்களின் காசுப் பாய்வைப் பெறுவதற்காக நிதியம் அதன் ஒப்பந்த ரீதியான உரிமையினை மாற்றம் செய்யும் பொழுது நிதியியல் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாது விடப்படுகின்றன. அத்துடன் ஒன்றில்

- சொத்துடமையின் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளும் வெகுமதிகளும் மாற்றல் செய்யப்படுகின்றன; அல்லது
- சொத்துடமையின் அல்லது கணிசமான அனைத்து இடர்நேர்வுகளும் வெகுமதிகளும் நிதியத்தினால் பிடித்துவைக்கப்படவோ அல்லது மாற்றல் செய்யப்படவோ இல்லையெனினும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.

3.2 ஏனைய சொத்துக்கள்

3.2.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் செலவிலிருந்து ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதி இழப்பைக் கழித்த பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுள் காலப்பகுதியில் அத்தகைய சொத்துக்களின் செலவினைப் பதிவழிக்கும் பொருட்டு பின்வரும் வீதங்களில் நேர்கோட்டு முறையில் தேய்மானங்கள் விதிக்கப்பட்டன.

| **சொத்து வகுப்பு** | **தேய்மான வீதம்** |
|---|---|
| கட்டடம் | 02% |
| பொறிகள் மற்றும் பொறித் தொகுதிகள் | 25% |
| அலுவலக உபகரணங்கள் | 25% |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| கணனி உபகரணங்கள் | 50% |
| ஏனையவை | 20% |

நடப்புப் பெறுமதி மீளப்பெற முடியாது போகக்கூடும் என்பதைச் சம்பவங்கள் அல்லது சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் காட்டும் பொழுது ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் நடப்புப் பெறுமதி, பெறுமதி இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் விடயமொன்று அகற்றப்படுகையில் அல்லது இதன் பயன்பாட்டிலிருந்து அல்லது அகற்றலிலிருந்து எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத போது நீக்கப்படுகின்றன. நீக்கப்படும் போது தோன்றுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது இழப்பு சொத்துக்கள் நீக்கப்படுகின்ற ஆண்டிற்கான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

3.2.2 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருளில் ஒருங்கிணைக்கப்படாத கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டுள்ளதுடன் செலவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து 2 வருட காலப் பயனுள்ள ஆயுள் கால அடிப்படையில் செலவிலிருந்து ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பைக் கழித்த பெறுமதியில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

3.2.3 இருப்புக்கள்

இருப்புக்கள் நிறைவேற்றப்பட்ட சராசரிச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன. மெதுவான நகர்வினைக் கொண்ட இருப்புக்களுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

3.2.4 பெறக்கூடியவை

| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி - 13.00% ஆண்டிற்கு | 173,160,000 | 173,160,000 | 173,160,000 | 173,160,000 |
| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி - 13.40% ஆண்டிற்கு | 88,240,000 | 88,240,000 | 88,240,000 | 88,240,000 |
| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி - 13.90% ஆண்டிற்கு | 375,000,000 | 375,000,000 | 375,000,000 | 375,000,000 |
| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி - 14.00% ஆண்டிற்கு | 500,000,000 | 500,000,000 | 500,000,000 | 500,000,000 |
| நேஷன்ஸ் றறஸ்ட் பாங்க் பிஎல்சி - 13.00% ஆண்டிற்கு | 549,150,000 | 549,150,000 | 549,150,000 | 549,150,000 |
| நவலோகா கொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி - 14.15% ஆண்டிற்கு | 114,500,000 | 114,500,000 | 114,500,000 | 114,500,000 |
| என்ரிபீ தொகுதிக்கடன்கள் - 11.5% ஆண்டிற்கு | 1,000,000,000 | 1,000,000,000 | 1,000,000,000 | 1,000,000,000 |
| பிஏபீசி வைப்புச் சான்றிதழ் 6மில் தி.உண்டியல் + 2.95 | 250,000,000 | 250,000,000 | 250,000,000 | 250,000,000 |
| பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி - 16.75% ஆண்டிற்கு | 105,900,000 | 105,900,000 | 105,900,000 | 105,900,000 |
| பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி - 8.75% ஆண்டிற்கு | 159,540,000 | 159,540,000 | 159,540,000 | 159,540,000 |
| பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி - 9.625% ஆண்டிற்கு | 32,880,000 | 32,880,000 | 32,880,000 | 32,880,000 |
| றிச்சேர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சி - 11.25% ஆண்டிற்கு | 100,000,000 | 100,000,000 | 100,000,000 | 100,000,000 |
| றிச்சேர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சி - 10.75% ஆண்டிற்கு | 35,680,000 | 35,680,000 | 35,680,000 | 35,680,000 |
| றிச்சேர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சி - 11.00% ஆண்டிற்கு | 81,390,000 | 81,390,000 | 81,390,000 | 81,390,000 |
| சம்பத் பாங் தொகுதிக்கடன்கள் - 16.5% ஆண்டிற்கு | 14,430,000 | 14,430,000 | 14,430,000 | 14,430,000 |
| சம்பத் பாங் தொகுதிக்கடன்கள் - 8.10% ஆண்டிற்கு | 1,800,000,000 | 1,800,000,000 | 1,800,000,000 | 1,800,000,000 |
| சம்பத் பாங் தொகுதிக்கடன்கள் - நிலையான 13.0% ஆண்டிற்கு | 251,775,000 | 251,775,000 | 251,775,000 | 251,775,000 |
| சம்பத் பாங் தொகுதிக்கடன்கள் - நிலையான 134% ஆண்டிற்கு | 170,095,000 | 170,095,000 | 170,095,000 | 170,095,000 |
| செலான் பாங்க் தொகுதிக்கடன்கள் - 8.60% ஆண்டிற்கு | 1,800,000,000 | 1,800,000,000 | 1,800,000,000 | 1,800,000,000 |
| செலான் பாங்க் - 15% ஆண்டிற்கு | 100,000,000 | 100,000,000 | 100,000,000 | 100,000,000 |
| சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி - 14.00% ஆண்டிற்கு | 33,214,000 | 33,214,000 | 33,214,000 | 33,214,000 |
| சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி - 14.25% ஆண்டிற்கு | 123,306,000 | 123,306,000 | 123,306,000 | 123,306,000 |

(ரூபா)

| தொகுதிக்கடன்கள் | முகப்புப் பெறுமதி | கொள்வனவுக் கிரயம் | சந்தைப் பெறுமதி | பதிவழிக்கப்பட்ட கிரயம் |
|---|---|---|---|---|
| சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி - 14.50% ஆண்டிற்கு | 93,576,000 | 93,576,000 | 93,576,000 | 93,576,000 |
| சிங்கர் சிறிலங்கா பிஎல்சி - 14.50% ஆண்டிற்கு | 31,193,400 | 31,193,400 | 31,193,400 | 31,193,400 |
| சிங்கர் சிறிலங்கா பிஎல்சி - 14.50% ஆண்டிற்கு | 46,790,100 | 46,790,100 | 46,790,100 | 46,790,100 |
| எஸ்எம்ஜபீ பாங்க் தொகுதிக்கடன்கள் - 2.50% ஆண்டிற்கு | 195,000,000 | 195,000,000 | 195,000,000 | 195,000,000 |
| முழு மொத்தம் | **15,123,251,100** | **15,123,454,500** | **15,123,452,697** | **15,123,452,697** |

## வர்த்தகப் பத்திரங்கள்

(ரூபா)

| வழங்குபவர் | முகப்புப் பெறுமதி | கொள்வனவுக் கிரயம் | சந்தைப் பெறுமதி | பதிவழிக்கப்பட்ட கிரயம் |
|---|---|---|---|---|
| சிங்கர் சிறிலங்கா பிஎல்சி | 1,082,045,184 | 1,000,000,000 | 1,000,000,000 | 1,000,000,000 |
| துணை மொத்தம் | **1,082,045,184** | **1,000,000,000** | **1,000,000,000** | **1,000,000,000** |

## நம்பிக்கைச் சான்றிதழ்கள்

(ரூபா)

| வழங்குபவர் | முகப்புப் பெறுமதி | கொள்வனவுக் கிரயம் | சந்தைப் பெறுமதி | பதிவழிக்கப்பட்ட கிரயம் |
|---|---|---|---|---|
| எல்பீ பினான்ஸ் நம்பிக்கைச் சான்றிதழ்கள் - 21 36.2 | 407,820,892 | 272,200,000 | 374,479,966 | 374,479,966 |
| மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி ந.சா - 12.6 | 360,000,000 | 245,530,287 | 277,200,199 | 277,200,199 |
| பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் ந.சா - 81 24.3 | 2,635,399,852 | 1,886,487,815 | 2,322,696,295 | 2,322,696,295 |
| செங்கடகல பினான்ஸ் கம்பனி ந.சா - 30 24.1 | 14,260,814 | 10,000,000 | 14,106,737 | 14,106,737 |
| துணை மொத்தம் | **3,417,481,558** | **2,414,218,102** | **2,988,483,197** | **2,988,483,197** |

# ஊழியர் சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான
# முதலீட்டுக் கூற்றுக்கான குறிப்புக்கள்

## 25. கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

### நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் (நேர்மாற்று மீள்கொள்வனவு)

(ரூபா)

| இணைத்தரப்பினர் | முகப்புப் பெறுமதி | கொள்வனவுக் கிரயம் | சந்தைப் பெறுமதி |
|---|---|---|---|
| நேஷன் டிரஸ்ட் பாங் | 1,500,000,000 | 1,500,000,000 | 1,500,000,000 |
| தேசிய சேமிப்பு வங்கி | 5,000,000,000 | 5,000,000,000 | 5,000,000,000 |
| நேஷன் டிரஸ்ட் பாங் | 1,000,000,000 | 1,000,000,000 | 1,000,000,000 |
| நேஷன் டிரஸ்ட் பாங் | 434,000,000 | 434,000,000 | 434,000,000 |
| ∴பஸ்ட் கப்பிட்டல் ரெஷரீஸ் லிமிடெட் | 200,000,000 | 200,000,000 | 200,000,000 |
| முழு மொத்தம் | **8,134,000,000** | **8,134,000,000** | **8,134,000,000** |

# ஊழியர் சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான
# முதலீட்டுக் கூற்றுக்கான குறிப்புக்கள்

## 26. முதலீட்டின் அசைவு

(ரூபா)

| முதலீட்டின் வகை | ஆரம்ப நிலுவை | முதலீடு | முதிர்ச்சி | விற்பனை | பதிவழிப்பு | மதிப்பீட்டு இலாபம்/ இழப்பு | இறுதி மீதி | 2014 | 2013 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாப மற்றும் நட்ட முதலீடுகளூடான சந்தைப் பெறுமதி | | | | | | | | | | |
| திறைசேரி முறிகள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| பட்டியல்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதனம் | 472,747,761 | 2,792,981,130 | - | 1,481,347,191 | | 89,378,474 | 1,873,760,174 | 0.1 | 0.0 | 0.1 |
| கம்பனித் தொகுதிக்கடன் | 114,500,000 | - | - | - | - | - | 114,500,000 | 0.0 | 0.0 | (0.0) |
| **துணை மொத்தம் - சந்தைப் பெறுமதியிலான வர்த்தகச் சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | **587,247,761** | **2,792,981,130** | **-** | **1,481,347,191** | **-** | **89,378,474** | **1,988,260,174** | **0.1** | **0.0** | **0.1** |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்க முதலீடுகள் | | | | | | | | | | |
| திறைசேரி முறிகள் | 10,589,952,365 | 12,939,509,518 | | 16,683,495,102 | | 800,197,696 | 7,646,164,476 | 0.5 | 0.8 | (0.3) |
| திறைசேரி உண்டியல்கள் | 13,587,399,142 | 943,574,000 | 13,743,793,000 | 224,730,675 | | 378,027,533 | 940,477,000 | 0.1 | 1.1 | (1.0) |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் | 62,790,898,739 | 4,822,676,424 | - | 5,905,321,034 | | 22,230,844,869 | 83,939,098,998 | 5.8 | 5.0 | 0.8 |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் | 9,480,625,000 | 1,289,999,995 | | | | | 10,770,624,995 | 0.7 | 0.8 | (0.0) |
| கம்பனி தொகுதிக்கடன் | 1,397,598,500 | 1,576,299,900 | | | | 131,001,801 | 3,104,900,201 | 0.2 | 0.1 | 0.1 |
| **துணை மொத்தம் - விற்பனைக்காக வைத்திருக்கப்பட்ட முதலீடுகள்** | **97,846,473,746** | **21,572,059,837** | **13,743,793,000** | **22,813,546,811** | **-** | **23,540,071,898** | **106,401,265,670** | **7.4** | **7.8** | **(0.4)** |
| முதிர்ச்சியின் போதான முதலீடுகள் | | | | | | | | | | |
| திறைசேரி முறிகள் | 1,116,351,323,267 | 315,042,323,493 | 124,574,300,000 | 42,095,799,261 | 14,223,680,623 | | 1,278,947,228,122 | 89.0 | 88.8 | 0.2 |
| ரூபாய்க் கடன்கள் | 23,100,000,000 | - | - | - | - | - | 23,100,000,000 | 1.6 | 1.8 | (0.2) |
| திறைசேரி உண்டியல்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| கம்பனித் தொகுதிக்கடன் | 9,594,281,100 | 5,691,673,400 | 162,500,000 | - | - | (1,803) | 15,123,452,697 | 1.1 | 0.8 | 0.3 |
| வர்த்தகப் பத்திரங்கள் | - | 1,000,000,000 | - | - | - | - | 1,000,000,000 | 0.1 | - | 0.1 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | 3,220,789,626 | 1,239,845,524 | 2,001,231,949 | | | 529,079,996 | 2,988,483,197 | 0.2 | 0.3 | (0.0) |
| **துணை மொத்தம் - முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட் முதலீடுகள்** | **1,152,266,393,993** | **322,973,842,417** | **126,738,031,949** | **42,095,799,261** | **14,223,680,623** | **529,078,193** | **1,321,159,164,016** | **91.9** | **91.6** | **0.3** |
| கடன்கள் மற்றும் பெறத்தக்க முதலீடுகள் | | | | | | | | | | |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 6,627,000,000 | 805,222,247,727 | 803,715,247,727 | - | - | - | 8,134,000,000 | 0.6 | 0.5 | 0.0 |
| **துணை மொத்தம் - கடன்கள் மற்றும் பெறத்தக்க முதலீடுகள்முதலீடுகள்** | **6,627,000,000** | **805,222,247,727** | **-** | **-** | **-** | **-** | **8,134,000,000** | **0.6** | **0.5** | **0.0** |
| **முழு மொத்தம்** | **1,257,327,115,500** | **1,152,561,131,112** | **944,197,072,677** | **66,390,693,263** | **14,223,680,623** | **24,158,528,566** | **1,437,682,689,860** | **100** | **100** | **-** |

# ஊழியர் சேமலாப நிதியம்
# 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான
# முதலீட்டுக் கூற்றுக்கான குறிப்புக்கள்

## 27. 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக் கட்டமைப்பின் வகைப்படுத்தல்

(ரூ.மில்)

| முதலீட்டின் வகை | வீதம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 | 2026 | 2028 | 2029 | 2032 | 2033 | 2034 | 2043 | 2044 | நிர்ணயிக்கப்படாத | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட முதலீடுகள் | 5.35 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 89,247 | - | - | - | - | - | - | - | - | 89,247 |
| | 5.65 | - | - | - | - | 150 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 150 |
| | 5.80 | - | - | 43,964 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 43,964 |
| | 6.20 | 9,429 | - | - | - | - | 64,320 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 73,749 |
| | 6.40 | - | 34,974 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 34,974 |
| | 6.50 | 13,781 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 13,781 |
| | 7.00 | - | - | - | - | - | - | - | - | 63,090 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 63,090 |
| | 7.25 | - | 30,986 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 30,986 |
| | 7.50 | - | - | - | 25,564 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 25,564 |
| | 8.00 | - | 14,439 | 31,881 | 4,200 | 11,557 | 9,225 | - | 53,006 | - | - | - | - | - | - | 63,418 | - | - | - | - | - | 187,726 |
| | 8.50 | - | - | - | 82,814 | 75,078 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 157,892 |
| | 8.75 | - | - | 1,000 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1,000 |
| | 9.00 | - | - | - | - | - | - | 9,385 | - | 6,850 | - | 9,944 | 20,400 | 178,006 | - | 31,845 | 119,215 | - | 30,676 | - | - | 406,321 |
| | 11.00 | 43,194 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 43,194 |
| | 11.20 | - | - | - | - | - | - | - | 7,532 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 7,532 |
| | 11.40 | - | - | - | - | - | - | - | - | - | 8,100 | - | - | - | - | - | - | - | - | - | - | 8,100 |
| | 11.75 | 11,871 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 11,871 |
| | 13.00 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 77,049 | - | - | - | - | - | - | 77,049 |
| | 13.25 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 19,870 | 75,158 | - | - | - | 95,028 |
| | 13.50 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 71,940 | - | 71,940 |
| | | **78,274** | **80,398** | **76,845** | **112,579** | **86,784** | **73,545** | **9,385** | **60,538** | **69,940** | **8,100** | **9,944** | **109,647** | **178,006** | **77,049** | **95,263** | **139,085** | **75,158** | **30,676** | **71,940** | **-** | **1,443,156** |
| விற்பனைக்குள்ள முதலீடுகள் | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | 6.20 | - | - | - | - | - | 76 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 76 |
| | 6.50 | 50 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 50 |

| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 7.00 | - | - | - | - | - | - | - | - | 450 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 450 |
| | 8.00 | - | - | 300 | 1,500 | - | - | - | - | - | - | - | - | - | - | 779 | - | - | - | - | - | 2,579 |
| | 8.50 | - | - | - | 200 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 200 |
| | 9.00 | - | - | - | - | - | - | 5 | - | - | - | - | 204 | - | - | - | - | - | - | - | - | 209 |
| | 11.20 | - | - | - | - | - | - | - | 1,275 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1,275 |
| | 11.40 | - | - | - | - | - | - | - | - | - | 2,150 | - | - | - | - | - | - | - | - | - | - | 2,150 |
| | | 50 | - | 300 | 1,700 | - | 76 | 5 | 1,275 | 450 | 2,150 | - | 204 | - | - | 779 | - | - | - | - | - | 6,989 |
| **துணை மொத்தம்** | | **78,324** | **80,398** | **77,145** | **114,279** | **86,784** | **73,621** | **9,390** | **61,813** | **70,390** | **10,250** | **9,944** | **109,851** | **178,006** | **77,049** | **96,042** | **139,085** | **75,158** | **30,676** | **71,940** | **-** | **1,450,144** |
| இலங்கை ரூபாய்க் கடன் | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | 9.50 | 19,600 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 19,600 |
| | 11.00 | 3,500 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 3,500 |
| **துணை மொத்தம்** | | **23,100** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **23,100** |
| **கம்பனித் தொகுதிக்கடன்கள்** | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட முதலீடுகள்** | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| இலங்கை வங்கி | | 200 | - | - | 576 | - | - | - | - | 134 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 910 |
| சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | | - | 18 | 100 | 145 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 263 |
| டிஎவ்சிசி வர்தன பாங்க் தொகுதிக்கடன்கள் | | - | 500 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 500 |
| ஹேலீஸ் பிஎல்சி | | - | 52 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 52 |
| வீ.அ. மற்றும் நி. கூட்டுத்தாபனம் | | - | - | 66 | - | - | 195 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 261 |
| ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | | - | - | - | - | 82 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 82 |
| எச்என்பீ தொகுதிக்கடன்கள் | | - | - | - | 317 | 1,500 | - | 2,000 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 3,817 |
| லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி | | 500 | - | - | - | 100 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 600 |
| லயன் புறுவரி சிலோன் பீஎல்சி | | - | 40 | 40 | 53 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 133 |
| எம்பீஎஸ்எல் | | - | - | - | 282 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 282 |
| தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி | | - | - | - | 811 | - | - | - | - | 375 | - | 500 | - | - | - | - | - | - | - | - | - | 1,686 |
| நவலோக கொஸ்பிட்டல்ஸ் | | - | - | - | 115 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 115 |
| என்ரிபீ தொகுதிக்கடன் | | - | 1,000 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1,000 |
| பிஏபீசி வைப்புச் சான்றிதழ் | | - | - | 250 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 250 |
| பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | | - | - | 160 | 139 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 298 |
| றிச்சோர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி | | - | - | 36 | 81 | 100 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 217 |
| சம்பத் பாங்க் தொகுதிக்கடன்கள் | | - | - | 14 | 422 | 1,800 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 2,236 |
| செலான் வங்கி | | - | - | - | 100 | - | 1,800 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1,900 |
| சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி | | - | 33 | 123 | 94 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 250 |

| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்கர் சிறிலங்கா | | 31 | 47 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 78 |
| எஸ்எம்ஜபீ பாங்க் தொகுதிக்கடன்கள் | | - | - | - | - | - | 195 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 195 |
| | | **731** | **1,690** | **788** | **3,133** | **3,582** | **2,190** | **2,000** | **-** | **509** | **-** | **500** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **15,123** |
| **விற்பனைக்குக் வைத்திருக்கப்பட்ட முதலீடுகள்** | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | | - | 18 | 18 | 39 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 76 |
| ஹேலீஸ் பிஎல்சி | | - | 52 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 52 |
| எச்என்பீ தொகுதிக்கடன்கள் | | - | - | - | - | 500 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 500 |
| எல்பீ பினான்ஸ் பிஎல்சி | | - | - | - | 221 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 221 |
| நேஷன்ஸ் றஸ்ட் பாங்க் பிஎல்சி | | - | - | - | 549 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 549 |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி | | - | - | - | - | 459 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 459 |
| றிச்சேர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி | | - | - | 36 | 81 | 100 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 217 |
| சம்பத் பாங்க் தொகுதிக்கடன்கள் | | - | - | - | 422 | 200 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 622 |
| செலான் பாங்க் தொகுதிக்கடன்கள் | | - | - | - | - | - | 200 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 200 |
| சிங்கர் சிறிலங்கா | | 31 | 47 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 78 |
| | | **31** | **117** | **54** | **1,312** | **1,259** | **200** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **2,974** |
| **இலாபம் அல்லது இழப்பு ஊடாக சந்தைப் பெறுமதி** | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| நவலோக ஹொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி | | - | - | - | 115 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | | **-** | **-** | **-** | **115** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **115** |
| துணை மொத்தம் | | **762** | **1,807** | **842** | **4,559** | **4,841** | **2,390** | **2,000** | **-** | **509** | **-** | **500** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **-** | **18,212** |
| திறைசேரி உண்டியல்கள் | | 1,000 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1,000 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | | 1,821 | 1,017 | 475 | 104 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 3,417 |
| வர்த்தகப் பத்திரங்கள் | | 1,000 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1,000 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **இலாபம் அல்லது இழப்பு ஊடாக சந்தைப் பெறுமதி** | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1,874 | 1,874 |
| விற்பனைக்காக வைத்திருக்கப்பட்ட முதலீடுகள் | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 83,086 | 83,086 |
| துணை மொத்தம் | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 84,960 | 84,960 |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 10,771 | 10,771 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | | 8,134 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 8,134 |
| முழுமொத்தம் | **-** | **114,141** | **83,222** | **78,462** | **118,942** | **91,626** | **76,011** | **11,390** | **61,813** | **70,899** | **10,250** | **10,444** | **109,851** | **178,006** | **77,049** | **96,042** | **139,085** | **75,158** | **30,676** | **71,940** | **95,731** | **1,600,739** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. } எல்ஈடபிள்யூ/பி/ஈபீஎவ்/எவ்ஏ/14 | මබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2016 ஜுன் 18 |

மாண்புமிகு அமைச்சர்,

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

**ஊழியர் சேமலாப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 6(3) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 6(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ஊழியர் சேமலாப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10

நிறுவனம் 09 கம்பனிகளில் முதலீடு செய்திருந்த ரூபா 3,886,806,962 பங்குகளின் கணக்காய்வுத் தினமான 2015 செப்டம்பர் 09 ஆந் திகதியளவிலான சந்தை விலை ரூபா 2,338,386,792 அல்லது நூற்றுக்கு 57 முதல் 78 சதவீதம் வரை வீழ்ச்சி அடைந்திருந்தபோதும் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

கம்பனி ஒன்றில் முதலீடு செய்திருந்த ரூபா 43,925,525 கிரயமுடைய பங்குகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 41,660,680 ஆல் அதாவது 95 சதவீதத்தாலும் கணக்காய்வுத் தினமான 2015 செப்டம்பர் 09 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 42,793,103 ஆல் அதாவது 97 சதவீதத்தாலும் சந்தைவிலை வீழ்ச்சியால் இழப்பிற்குள்ளாகியமை நிதிக்கூற்றுக்களில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் அது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) 2011 தொடக்கம் 2014 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின்போது 5 வங்கிக் கணக்குகளில் கீழே விபரிக்கப்பட்ட ரூபா 1,687,186,000 கொடுக்கல் வாங்கல்கள் கணக்குகளில் திருத்தஞ் செய்யப்படுவதற்கோ அல்லது தீர்த்து வைக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

| கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| காசேட்டில் பதிவு செய்யப்படாத நேரடி வைப்புகள் | 726,148,074 |
| மதிப்பிழந்த காசோலைகள் | 44,941,965 |
| நேரடிக் கூட்டல் மற்றும் கழித்தல் | 136,761 |
| இனங்காணப்படாத மீதிகள் | 915,959,200 |
| மொத்தம் | 1,687,186,000 |

(ii) குறித்த காலப்பகுதியின்போது வழங்கப்பட்டு வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 119,657,756 கூட்டுத்தொகையுடைய 3008 காசோலைகள், வைப்பிலிடப்பட்டு தேறாதிருக்கும் ரூபா 348,499,737 கூட்டுத்தொகையுடைய காசோலைகள் மற்றும் ரூபா 74,474,447 கூட்டுத்தொகையுடைய 75,396 காசுக் கட்டளைகள் என்பன தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாது தொடர்ச்சியாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த வங்கிக் கணக்கிணக்கத்தைத் தயாரிக்கும்போது வங்கியால் உறுதிப்படுத்தப்பட்ட வங்கிக் கூற்று மீதிக்குப் பதிலாக வேறு மீதியை அடிப்படையாகக் கொண்டிருந்தமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் வங்கி மீதியினது பிழையற்ற தன்மை கணக்காய்வில் கேள்விக்குரியதாகியது. விபரம் வருமாறு.

| வங்கிக் கணக்கு இலக்கம்/விபரம் | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | வங்கிக் கணக்கிணக்கத்தைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்திய மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 5238958 | 1,796,753,332 | 1,972,721,415 | 175,968,083 |
| 085378 | 53,255 | 6,777,369 | 6,724,114 |
| முரண்களைத் தீர்க்கும் கணக்கு | | 111,801,745 | 111,801,745 |
| மொத்தம் | 1,796,806,587 | 2,091,300,529 | 294,493,942 |

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 8,836,366,465 சேமலாப நிதியாளர்களது கணக்குகளில் செலவு வைக்கப்படாததாலும் கொடுப்பனவு செய்யப்பட்டுத் தீர்த்து வைக்கப்படாததாலும் அச் சேமலாப நிதியாளர்களது நிதியம் இழப்பிற்குள்ளாவதற்கோ அல்லது கொடுப்பனவுகள் தாமதம் அடைவதற்கோ காரணமாயிற்று. இம்மீதிகளைத் தாமதமின்றி தீர்த்து வைக்காமை தொடர்பாக அரசாங்கக் கணக்குகள் குழுவும் அதற்கான காரணத்தை வினவியிருந்தது.

(ஆ) கொழும்பு மேற்கு மாவட்டத் தொழில் அலுவலகத்திற்குரிய 374 நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாமை மற்றும் அவை இடையே தடைப்பட்டமை காரணமாக ஊழியர் சேமலாப நிதியம் அறவிடவேண்டிய பங்களிப்புப் பணம் மற்றும் தண்டப்பணம் என்பவற்றினது கூட்டுத்தொகையான ரூபா 359,977,173 ஐ 2015 செப்டம்பர் 30 ஆந் திகதியளவிலும் அறவிட முடியாது போயிருந்தது.

(இ) தீவடங்கிலுமுள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய 114 அலுவலகங்களில் இருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பங்களிப்புப்பண நிலுவை மற்றும் தண்டப்பணமாக ரூபா 6,256,456,427 கூட்டுத்தொகை அறவிடப்படவேண்டியிருந்தது.

(ஈ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் அதன் பதவியணியினருக்கு 2009 செப்டம்பர் தொடக்கம் 2010 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப்பணம் மற்றும் தண்டப் பணமாகிய ரூபா 49,462,817 ஐ நிதியம் அறவிட முடியாதிருந்தது.

(உ) 2000 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு இறுதி வரையான காலப்பகுதியின் போது 169 உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த தாமத தண்டப் பணமாகிய ரூபா 14,379,993 குறித்தவாறு அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்படாத காரணத்தால் 2015 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட முடியாதிருந்தது.

(ஊ) 2005 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியின்போது வழக்குகள் தொடரப்பட்டு அறவிடப்பட்ட கொடுப்பனவு செய்யப்படாத பங்களிப்புப்பணம் மற்றும் தண்டப்பணம் ஆகிய ரூபா 65,198,717 தொடர்பான சரியான அங்கத்தவர் தகவல்கள் நிதியத்திடம் இல்லாதிருந்த காரணத்தால் அது அரசிறையில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தொழில் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட நிலையான சொத்துக்களாகிய ரூபா 803,429,255 பொது 287 மாதிரிப் படிவத்தில் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட வேண்டுமாயினும், குறித்த மாதிரிப் படிவத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

| | |
|---|---|
| 2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கை | இலங்கை மத்திய வங்கி வளாகத்தில் உள்ள ரூபா 159,280,110 பெறுமதியான சொத்துக்கள் உள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கான பொருட் கணிப்பு மீளாய்வாண்டின்போது மேற்கொள்ளப்பட வில்லை. |
| 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதியத்தில் பணி புரியும் இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தர்களது ஊழியர் வருமானத்தின் அடிப்படையில் குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை அறவிடாது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 26,124,841 கூட்டுத் தொகையானது நிதியத்தாலேயே வழங்கப்பட்டிருந்தது. |
| 2008 மார்ச் 03 ஆந் திகதிய 01/2008 ஆம் இலக்கத் திறைசேரிச் செயற்பாட்டுச் சுற்றறிக்கையின் 3(I) ஆம் பந்தி | அரச வங்கி அல்லாத வேறெந்த நிதி நிறுவனத்தில் அரசாங்கத்துடன் நேரடியாகவோ அல்லது சுழற்சி வாயிலாகவோ தொடர்புடைய நிதியத்தை முதலீடு செய்வதானது உடனடியாக அமுலுக்கு வரும் பொருட்டு நிறுத்தப்பட வேண்டுமாயினும், 135 சந்தர்ப்பங்களில் ஊழியர் சேமலாப நிதியம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 12 அரச சார்பற்ற நிதி நிறுவனங்களில் ரூபா 44,041,102,093 கிரயமுடையதும் ரூபா 37,940,740,000 முகப் பெறுமதி உடையதுமான திறைசேரிப் பிணைமுறிகளைக் கொள்வனவு செய்திருந்தது. |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

### 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி நடவடிக்கைகளது பெறுபேறுகள் ரூபா 150,661,909,688 நிகர இலாபமாகியதுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நிகர இலாபம் ரூபா 125,609,876,617 ஆகவும் இருந்ததால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 25,052,033,071 இலாப அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வருமானம் ரூபா 26,862,070,856 அதிகரித்தமையே இதற்கான காரணமாகும்.

### 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டு இறுதியில் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

| விபரம் | உள்ளவாறான எண்ணிக்கை | நிதியச் செயற்பாட்டுடனான எண்ணிக்கை | சதவீதம் % |
|---|---|---|---|
| தனியார் துறை மற்றும் அரசதுறையில் பணி புரிவோர் | 3,723,947 | 2,400,000 | 64.44 |
| சேவை வழங்குநர் | 235,872 | 71,000 | 30.10 |
| நிதியத்தின் அங்கத்தவர்களது கணக்கு எண்ணிக்கை | 15,400,000 | 2,400,000 | 15.58 |

(மூலம் : இலங்கை மத்திய வங்கி -ஊழியர் சேமலாப நிதியம் 2014)

2014 ஜனவரி 01 இல் உள்ளவாறான நிதியத்தின் செயற்பாடற்ற அங்கத்தவர் கணக்குகளது எண்ணிக்கை 12,799,572 ஆகும். இதில் செலவு வைக்கப்பட்டிருந்த பங்களிப்புப்பணம் ரூபா 632,989,206,006 ஆகும். அக்கணக்குகளுக்கு உரித்துடையோர் தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் செலவு வைக்கப்பட்டிருந்த வட்டித் தொகை ரூபா 63,540,018,009 ஆகும்.

செயற்பாடற்ற இக்கணக்குகளது எண்ணிக்கை அங்கத்தவர்களது மொத்த கணக்குகளின் எண்ணிக்கையில் 83.11 சதவீதம் ஆகும்.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை ஊழியர் சேமலாபநிதிய பங்களிப்புப்பணம் மற்றும் தண்டப் பணமாகிய ரூபா 10,880,797,461 ஐ அறவிடுவதற்கு நிதியம் தீவடங்கிலும் 13,885 வழக்குகளைத் தொடர்ந்திருந்தபோதும், அவ்வழக்குகள் மூலம் எவ்வளவு பணம் அறவிடப்பட்டது. எத்தனை வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டன போன்ற தகவல்களைப் பெறும் விதத்திலான தகவல் முறைமை ஒன்று பேணப்படவில்லை.

(இ) அங்கத்தவர்களுக்கிடையே வழங்கப்பட்ட நலன்

| ஆண்டு | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட நலன்களது சதவீதம் (நூற்றுக்கு) | 10.5 | 11 | 11.5 | 11.5 | 12.5 | 13.75 | 13.2 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டின்போது முதலீட்டு வருமானம் ரூபா 5,049,303,683 குறைவுற்றதால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நலன்களது சதவீதம் முன்னைய ஆண்டைவிட 1 சதவீதம் குறைவடைந்திருந்தது.

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பங்கிலாபம் வழங்கப்படுவதற்காக ஆண்டில் ஈட்டிய வருமானம் போதுமானதாக இல்லாத காரணத்தால் முறையே ரூபா 5,700,000,000 மற்றும் ரூபா 3,700,000,000 பங்கிலாபத்தைச் சமமாக்கும் ஒதுக்கத்திலிருந்து வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டியதாயிற்று.

(iii) நிதி அமைச்சரால் 2014 ஒக்டோபர் 24 ஆந் திகதியன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம் அங்கத்தவர்களுக்கு ரூபா 6,000,000,000 மிகையூதியமாக வழங்கப்படுவதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமை மற்றும் ரூபா 4,000,000,000 பங்கிலாபச் சமமாக்கல் ஒதுக்கத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டமை காரணமாக 2014 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கான நலன்களது சதவீதம் நூற்றுக்கு 10.5

சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. ஆயினும், குறித்த மிகையூதியம் சட்டபூர்வமற்ற நிதியேற்பாடாகையால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதனை அங்கத்தவர்களுக்கு வழங்கமுடியாதிருந்தது.

(ஈ) 1998 ஆம் ஆண்டு தொடக்கம் அரச வங்கி மற்றும் அரசுடன் இணைந்த 5 நியதிச் சட்ட நிறுவனங்களினூடாக ஊழியர் சேமலாப நிதியக் கணக்கை பிணையாக வைத்துக் கடன் பெறும் முறை அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டின் 17,786 கடன் சான்றிதழ் பத்திரங்களுக்கு ரூபா 8,021 மில்லியனுக்கான கடனுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த காலப்பகுதியின்போது இக்கடன் தொகையில் திருப்பிச் செலுத்தப்படாது புறக்கணிக்கப்பட்ட கடன் ரூபா 2,394 மில்லியன் ஆகும். அவ்வாறே, 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை 226,286 கடன் சான்றிதழ் பத்திரங்கள் மூலம் ரூபா 55,806 மில்லியன் கடனாக வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் திருப்பி அளிக்கப்படாது புறக்கணிப்புக்குள்ளான கடன் ரூபா 19,131 மில்லியன் ஆகும். அதற்கமைய, நிதியத்தின் முக்கிய நோக்கத்திற்கு முரணாக அங்கத்தவர்களுக்கு நலன் வழங்கப்படுவதற்குப் பதிலாக குறித்த வங்கிகளுக்கு நிலுவைத் தொகையை வழங்கவேண்டி ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதுளை தொழில் நீதிமன்ற வழக்குடன் தொடர்புடையதாக ஊழியர் சேமலாப நிதியத்தைப் பெறுவதற்காகத் தொடரப்பட்ட வழக்கின் இறுதியில், அங்கத்தவர் குறித்த சேவை வழங்குநரின் கீழ் பணியாற்றியவர் அல்ல என நீதிமன்றம் தீர்மானத்திருந்த போதும், முறைப்பாட்டளரான அந்த அங்கத்தவருக்கு ஊழியர் சேமலாப நலனாக ரூபா 153,291 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1981 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதி வரையான காலப்பகுதியின்போது மரண சகாயநிதியைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 345 விண்ணப்பங்களுக்கு ரூபா 45,789,888 வழங்குவதானது 4 காரணங்களை முன்வைத்து 2015 ஜுலை 31 ஆந் திகதியளவிலும் தாமதம்

ஆகியிருந்ததுடன், அதன் காரணமாக குறித்த நலன்பெறுநர் 30 ஆண்டுகளுக்கு மேலாக தமக்குரிய நலன்களைப் பெறமுடியாதவாறிருந்தனர்.

(இ) 2006 பெப்ரவரி 02 ஆந் திகதி தொடக்கம் 2014 ஏப்ரல் 30 வரையான காலப்பகுதியின்போது தொழில் ஆணையாளரால் கொடுப்பனவிற்காக இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 187 விண்ணப்பங்களுக்குரிய ரூபா 26,204,833 ஏறக்குறைய 9 ஆண்டுகளாக 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் கொடுப்பனவு செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினது பங்களிப்பைப் பெற்று ரூபா 8.557 பில்லியன் மதிப்பீட்டிலான மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டவாறிருக்கும் “மெஹெவர பியச” எனும் கட்டிடத்திற்கு ஊழியர் சேமலாப நிதியத்தால் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.89 பில்லியன் வழங்கப்பட்டிருந்தபோதும், 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்த) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கட்டிடக் காணியினது உரித்தை ஊழியர் சேமலாப நிதியத்திடம் ஒப்படைப்பதற்கான சட்ட மா அதிபரின் உடன்பாடு இல்லாமை காரணமாக நிதியத்தால் வழங்கப்பட்ட பணத்தை மீளளிப்பதற்கு நிதி அமைச்சு இசைந்தபோதும், 2015 நவெம்பர் 30 வரை ரூபா 1.52 பில்லியன் மீளளிக்கப்படாததால் அப்பணத்தை வேறு முதலீடுகளில் பயன்படுத்திப் பெறக் கூடியதாகவிருந்த வருமானத்தை நிதியம் இழந்திருந்தது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 85 கம்பனிகளில் ஈடுபடுத்தப்பட்ட ரூபா 74,012,464,056 தொகையுடைய ஒட்டுமொத்த நெடுங்கால மற்றும் குறுகிய தவணை முதலீடுகளில் 48 கம்பனிகளில் பயன்படுத்தியிருந்த ரூபா 33,574,091,857 முதலீடுகளது அத்தினத்தில் உள்ளவாறான சந்தைப் பெறுமதி ரூபா 6,532,850,748 ஆல் வீழ்ச்சி அடைந்திருந்தது. கணக்காய்வுத் தினமான 2015 செப்டெம்பர் 09 ஆந் திகதியில் உள்ளவாறு 46 கம்பனிகளில் ரூபா 35,227,924,125 முதலீட்டினது பங்குச் சந்தைப் பெறுமதி ரூபா 6,924,184,083 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த நெடுங்கால மற்றும் குறுகிய தவனை முதலீடான ரூபா 74,012,464,056 தொடர்பாக 2015 ஜுன் 30 ஆந் திகதியளவில் பங்குச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பெறக் கூடியதாக இருந்த மூலதன இலாபம் 0.31 சதவீதத்தைக் குறிக்கும் அதி குறைந்த பெறுமதியான ரூபா 231,124,603 ஐக் கொண்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நெடுங்கால மற்றும் குறுகிய தவணையாக ரூபா 3,001,170,533 முதலீடு செய்யப்பட்டிருந்த 13 கம்பனிகள் 2014/15 கணக்கீட்டு ஆண்டுகளில் நட்டத்திற்குள்ளாகியிருந்தன.

(ஈ) 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பங்குச் சந்தையில் நிதியம் முதலீடு செய்திருந்த ரூபா 332,657,367,841 கூட்டுத்தொகையுடைய முதலீடுகளுக்குப் பெறப்பட்ட நலன் 2.67 சதவீதம் முதல் 22.99 சதவீதம் வரையாக இருந்ததுடன், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 19,127,551,243 முதலீடு செய்யப்பட்டிருந்த 30 கம்பனிகளின் மூலம் நிதியம் வருமானம் எதனையும் பெறாதிருந்தது.

(உ) தொடர்ச்சியாக நட்டமீட்டியவாறிருந்த விமானக் கம்பனி ஒன்றிலும் நிதி நிறுவனம் ஒன்றிலும் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு 2011 மற்றும் 2012 காலப்பகுதியின்போது ரூபா 705,489,614 செலவிடப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2015 ஒக்டோபர் 31 வரை அம் மூதலீடுகளால் நிதியம் இலாபம் எதனையும் பெறவில்லை.

(ஊ)(i) இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை 2010 மே 05 ஆந் திகதியன்று மேற்கொண்ட ஒரு தீர்மானத்திற்கமைய, ஹோட்டல் கம்பனி ஒன்றில் 23,712,200 பங்குகளை ரூபா 34.17 வீதப்படி ரூபா 810,321,610 செலவில் கொள்வனவு செய்திருந்தபோதும், அம் முதலீட்டால் இலாபம் எதுவும் பெறப்படாததுடன் 2015 செப்டெம்பர் மாதத்தில் அக்கம்பனியின் பங்கு ஒன்றினது விலை ரூபா 12.40 ஆகவுமிருந்தது.

(ii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்தினது ஒட்டுமொத்த முதலீட்டில் 13.19 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 9,759,255,039 ஹோட்டல் துறையில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், 2014 ஆம் ஆண்டின் போது அத்துறையின் முதலீடுகளால் மூலதன இலாபம் எதுவுமே பெறப்படவில்லை.

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை ஹோட்டல் துறையில் முதலீடு செய்து பெறப்பட்ட வருமானம் 1.45 சதவீதம் முதல் 2.86 சதவீதம் வரையான குறைந்த மட்டத்திலேயே இருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 8 ஹோட்டல் கம்பனிகளில் பயன்படுத்தப்பட்ட ரூபா 3,000 மில்லியனிலும் கூடிய நெடுங்கால மற்றும் குறுகிய கால முதலீடுகளின் மூலமும் நிதியம் இலாபம் எதனையும் பெறவில்லை.

## 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

மீளாய்வாண்டின்போது ரூபா 34,967,296 செலவில் தொழில் உத்தியோகத்தர்களுக்கெனக் கொள்வனவு வெய்யப்பட்ட 395 கணனிகள் (Tablet) தொழில் உத்தியோகத்தர்களுக்கிடையேயும் நிறைவேற்றுதர உத்தியோகத்தர்களுக்கிடையேயும் விநியோகிக்கப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட வேண்டிய தொழில் விசாரணை கணனிமயப்படுத்தல் செயற்திட்ட நடவடிக்கைகள் 2015 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில் திணைக்கள ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 52 வெற்றிடங்கள் நிலவின. 2014 திசெம்பர் 01 ஆந் திகதியளவில் அவ்வெண்ணிக்கை 107 ஆக விருந்தது. வெற்றிடங்கள் நிரப்பப்படாததால் ஊழியர் சேமலாப நிதிய அறவீடுகள், வழக்குத் தொடரல் மூலம் பணம் தீர்த்து வைக்கப்படுதல் என்பன தாமதமாவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தின் இலங்கை மத்திய வங்கிப் பதவியணியினர் நிதிச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் அல்ல. எனினும், அவர்களின் பொருட்டு 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 138, 120, 166 எனப் பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். 2013 ஆம் ஆண்டின்போது 120 ஆகவிருந்த பதவியணியினர் 2014 ஆம் ஆண்டின்போது 166 வரை 46 ஆல் அதிகரிக்கப்பட்டமைக்கான தேவையைக் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின்போது தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்தியவங்கி ஆகியவற்றிலிருந்து இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களது சம்பளம் மற்றும் ஒரு ஊழியருக்கான கிரயம் என்பவற்றை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இலங்கை மத்திய வங்கியில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களது ஊழியர் ஓரவரது கிரயம் நூற்றுக்கு 30 சதவீத அதிகரிப்பைக் காட்டிற்று.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு தொழில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. அங்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 2 வெற்றிடங்கள் உள்ளதாலும் பதவியணி போதுமானதாக இல்லாதிருப்பதாலும் நிதியத்தின் வரையறைக்குட்பட்ட பகுதி மாத்திரமே உள்ளகக் கணக்காய்விற்குள்ளாகின்றது. நிதியத்தின் நிதி நிர்வாகத்திற்கு உரிய உள்ளகக் கணக்காய்வு, இலங்கை மத்திய வங்கியால் தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் நிதிய முதலீட்டு நடவடிக்கைகள் போன்ற துறைகள் உள்ளடக்கப்படாது போகின்றது. குறித்த கம்பனிக்கு 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் ரூபா 6,494,880 மற்றும் ரூபா 4,871,160 எனக் கணக்காய்வுக் கட்டணமாக வழங்கப்பட்டிருந்தது.

### 5.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளின்போது அறிக்கையிடப்பட்டு 2015 ஒக்டோபர் 31 வரை தீர்த்து வைக்கப்படாதிருக்கும் பிரதான கணக்காய்வுப் பந்திகள் சில பின்வருமாறு.

(அ) 2004 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் போது நீதி மன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டு அறவிடப்பட்ட ரூபா 83,410,920 எக் காரணத்தின் பொருட்டுத் தொடரப்பட்ட வழக்குகளுக்கு உரியன என்பது 2015 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் இனங்காணப்படாதிருந்தது.

(ஆ) கண்டி வடக்கு மற்றும் கண்டி தெற்கு ஆகிய 2 மாவட்ட தொழில் பிரதேசங்களுக்குரிய 2 அரச பெருந்தோட்டங்களுக்குரிய 31 பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் 21 மக்கள் பெருந்தோட்டக் கம்பனிகள் ஆகியவற்றிலிருந்து 2003 முதல் 2013 வரையான காலப்பகுதியின்போது அறவிடப்பட வேண்டிய பங்களிப்புப்பண நிலுவை மற்றும் தண்டப்பணம்

என்பன முறையே ரூபா 208,378,193 மற்றும் ரூபா 286,729,384 என ரூபா 495,107,577 கூட்டுத்தொகை ஆகும். இவை 2015 ஜுன் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தன.

(இ) 1995 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின்போது முடிவுக்கு வந்த வழக்குகளில் கண்டி நீதவான் நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட பங்களிப்புப்பணம் மற்றும் தண்டப்பணம் ரூபா ரூபா 16,703,661 ஐ நிதியம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை 2015 ஒக்டோபர் 31 ஆந் திகதிவரையிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஈ) மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலக அதிகாரப்பிரதேசதத்திற்குரிய நிறுவனங்களிலிருந்து 2003 முதல் 2006 சரையான காலப்பகுதிக்கென பங்களிப்புப்பணம் மற்றும் தண்டப்பணமாக நிதியம் பெறவேண்டிய ரூபா 313,452,501 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் ஆகியோருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

### (அ) இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம்

(i) முதலீட்டு நலன் தொடர்பாகக் கவனம் மேற்கொள்ளுதல்

(ii) உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிதிய முதலீடுகள் மற்றும் அதனாலான நலன்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்

### (ஆ) தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப்பிரிவு

(i) பங்களிப்புப் பணத்தையும் தண்டப் பணத்தையும் அறவிடுதல்

(ii) நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணுதல்

(iii) சேவை வழங்குநர் நிலையங்களைப் பரிசோதித்தல்

ஒப்பம் : எச்.எம்.காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி